ISSN 1391-9504




தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மிதந்து வந்த கப்பல்

இரண்டாம் இராஜசிங்க மன்னன் சூழ்நிலைக்கு ஏற்ற விதத்தில் சமயோசிதமாகச் செயல்படவில்லை. இதனால், நாட்டிற்கு எந்நேரமும் நட்டமும் பாதிப்புகளும் ஏற்பட்டன. அவர் ஒல்லாந்தருடனும் அவர்களின் எதிரிகளுடனும் முறையற்ற ரீதியில் செயல்பட்டார்.

கி.பி 1659 இல் 'பர்சிய மர்ச்சன்ட்' எனும் பெயருடைய ஆங்கிலக் கப்பலொன்று மாலைதீவிற் கருகில் விபத்தில் சிக்கியது. அக்கப்பலில் பயணித்தோர் மாலைதீவிற்குச் சென்றனர். அந்நாட்டில் இருந்து வேறு ஒரு கப்பல் மூலம் கொழும்பு நோக்கிப் புறப்பட்டனர். எனினும், அக்கப்பல் இராஜசிங்க மன்னனுக்கு சொந்தமான கல்பிட்டியில் தரை தட்டியது. இக்கப்பலில் இருந்தவர்களில் பதின்மூன்று பேர் கரைக்கு வந்தனர். அப்பிரதேசத்திற்குப் பொறுப்பாக இருந்த திசாதிபதி அவர்களைக் கைது செய்தார். அவர்களை இரு குழுக்களாகப் பிரித்தார். கண்டிக்கு அழைத்துச் சென்றார். எஞ்சியோர் மன்னாரில் இருந்த ஒல்லாந்தரிடம் சென்றனர்.

கண்டிக்குக் கொண்டு செல்லப்பட்டவர்களிடம் மன்னன் நடந்தவற்றைக் கேட்டறிந்து கொண்டான். அவர்களை விடுதலை செய்வதாக வாக்குறுதி அளித்தான். தனக்குச் சொந்தமான பிரதேசத்தில் உள்ள ஊர்களில் அவர்களை வாழ வைத்தான். அவர்கள் நீண்டகாலமாக அந்த ஊர்களில் வாழ்ந்து வந்தனர்.

கி.பி 1660 பெப்ரவரி மாதத்தில் 'த ஆன்' எனும் கப்பலில் வர்த்தகக்குழுவொன்று கொட்டியாரத்திற்கு வந்தது. அந்தக் கப்பலும் வழியில் சூறாவளியில் சிக்கி சேதமடைந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் ஆங்கிலப் பேச்சு ஒரு பாடமாக இணைக்கப்படவுள்ளது

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

பாடசாலைகளில் ஆங்கிலப் பேச்சை ஒரு பாடமாக அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அதன்படி, பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் க.பொ.த உயர்தரம் வரையான வகுப்புகளின் பாடத்திட்டத்திற்குள் இந்தப் பாடத்தை உள்ளடக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகவும், இது 2011 ஆம் ஆண்டிலிருந்து அமுலுக்குக் கொண்டுவரப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

கணினி மற்றும் ஆங்கில மொழிப் பயிற்சி தொடர்பில் ஜனாதிபதி செயலணியின் ஆலோசனைப்படி செயற்படுத்தப்படவுள்ள இந்த



வேலைத்திட்டத்திற்காக அமைச்சரவை அங்கீகாரமும் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதற்காக ஜனாதிபதி செயலணி, கல்வி அமைச்சு மற்றும் இலங்கை தகவல் தொழில்நுட்ப சம்மேளனம் என்பன இணைந்து, 22,000 ஆசிரியர்களுக்கு ஆங்கிலப் பேச்சு தொடர்பில் 18 மாத பயிற்சியை வழங்கவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை, இலங்கை ஆசிரியர்கள் 380 பேருக்கு இந்தியாவின் ஹைதராபாத் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பேச்சு தொடர்பான பயிற்சியொன்று வழங்கப்படுவதாகவும், அந்த பயிற்சியை நிறைவு செய்து திரும்புகின்ற ஆசிரியர்களை வைத்து நாட்டின் ஏனைய ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# சூரிய ஒளியில் இயங்கும் சுற்றுலாக் கூடாரம்

சுற்றுலாப் பிரியர்களுக்காக கூடாரம் ஒன்று அமெரிக்காவைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றினால் வடிவமைக்கப்பட்டுள்ளது. பொதுவாக, சுற்றுலா செல்பவர்கள் பாதுகாப்புக் காரணங்கள் உட்பட மற்றும் பல தேவைகளின் நிமித்தம் சுற்றுலா விடுதிகளிலேயே தங்குவர். தவிர, கூடாரங்களில் தங்குவது இல்லை. இருந்தாலும் சுற்றிப் பார்க்க வெளியில் செல்லும்போது சற்றுத் தங்கி ஓய்வெடுக்கவும் பொருட்களை வைக்கவும் அவசரத் தேவைகளின்போது ஒதுங்கவுமென கையோடு எடுத்துச்செல்லக் கூடிய கூடாரங்களை சிலர் வைத்திருப்பர்.

ஆனால்,புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த சுற்றுலாக் கூடாரம் முற்றிலும் சூரிய ஒளியைப் பயன்படுத்தி இயங்கக் கூடியது. எனவே, இதிலிருந்து சமையல் செய்தல்,கையடக்கத் தொலைபேசி மற்றும் கணினி போன்றவற்றை மின்னேற்றுதல் மற்றும் இயக்குதல் போன்றவற்றுக்கான மின்சாரத் தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்வதற்கான வாய்ப்புள்ளது. இரவில் தங்க வேண்டிய தேவை ஏற்படின், அற்கான ஒளித்தேவையைப் பெற்றுக்கொள்வதற்கான வசதியையும் இது கொண்டிருக்கின்றது.

மேலும், இந்தக் கூடாரத்தில் தந்தியில்லா (wireless) இணைய





தொடர்பும் காணப்படுகின்றது. எனவே, நாம் கூடாரத்திலிருந்து வெகுதூரம் சென்று வழிதவறிவிட்டாலும் திரும்பி வருவதற்கான வழிகாட்டியாகவும் இது தொழிற்படும். அத்துடன், இந்தக் கூடாரத்தை கையடக்கத் தொலைபேசியூடாகவும் இயக்கலாம். ஆக, இந்த சுற்றுலாக் கூடாரம் அனைத்து சுற்றுலாப் பிரியர்களுக்கும் சிறந்த பயனைப் பெற்றுக்கொடுக்கும் என எதிர்பார்க்கலாம்.

# தனியார் பாடசாலைகளிலும் அறிவுரை சேவை

அரசாங்க பாடசாலைகளைப் போன்றே சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகளிலும் அறிவுரை சேவை வழங்கல் வேலைத்திட்டமொன்றை செயற்படுத்துவதற்கு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


மன உளைச்சலுக்கு ஆளாகும் மாணவர்களுக்கு ஆறுதலளிக்கும் வகையில் உடனடியாக பாடசாலைகளில் இந்த வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

பரீட்சை, தனிப்பட்ட பிரச்சினைகள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் மன உளைச்சலுக்கு ஆளாகின்ற மாணவர்களுக்கு ஆறுதலளிக்கும் வகையிலேயே இந்த அறிவுரை



சேவை செயற்படுத்தப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சட்டக் கல்லூரி அனுமதிக்கான வயதெல்லை நீடிப்பு



2010 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை சட்டக் கல்லூரிக்கு மாணவர்களை அனுமதித்துக்கொள்வதற்கான ஆகக் கூடிய வயதெல்லை 30 ஆக நீடிக்கப்படவுள்ளதாக அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

சட்டக் கல்லூரி அனுமதிக்கான குறைந்த வயதெல்லை 17 வயதென்று இருந்தபோதும், இதுவரை ஆகக் கூடிய வயதெல்லையொன்று நிர்ணயிக்கப்படவில்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# சிறுவர் சஞ்சிகையில் உங்களுக்கும் வாய்ப்பு

சிறுவர்களின் படைப்புத்திறன், எழுத்துத் திறன், ஓவியத்திறன் ஆகியவற்றை ஊக்குவிக்குமுகமாக 'அபே லமா லோக்கய' என்ற சிங்கள மொழி சஞ்சிகையில் தமிழ் மொழிமூல சிறுவர்களின் ஆக்கங்களும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, தமிழ் மொழிமூல சிறுவர்கள் தமது படைப்புக்களை, ஆக்கங்களை மேற்படி சஞ்சிகைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

**அனைத்துப் படைப்புகளும் எந்தவொரு விருப்பமான தலைப்பிலும் அமையலாம்.**

**கவிதை:** ஒவ்வொரு பந்தியிலும் ஆறு வரிகளைக் கொண்டதாக ஆகக்கூடியது நான்கு பந்திகளுள் அடங்குதல் வேண்டும்.

**கட்டுரை:** கட்டுரைகள் புள்ஸ்கெப் தாளில் 2 1/2 பக்கத்தில் அமையலாம்.

**சித்திரம்:** எந்தவொரு அளவிலும் எந்தவொரு வர்ணப் பூச்சையும் பயன்படுத்தி சித்திரம் வரையலாம்.

**புகைப்படம்:** புகைப்படங்கள் கறுப்பு வெள்ளை 5x7(5R) அளவில் இருத்தல் வேண்டும்.

**சகல ஆக்கப்படைப்புக்களும் படைப்பாளியின்...**

* முழுப்பெயர் / முகவரி, தொ.பேசி இலக்கம் * வகுப்பு * பாடசாலை * மாவட்டம் மற்றும் மாகாணம் ஆகிய விபரங்களை குறிப்பிட்டு பெற்றோரின் கையொப்பத்துடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**முகவரி: சமிந்த ரண்ஷாந்த்,**
**அபே லமா லோக்கய, 62, புவக் அரம்ப வீதி,**
**கடலான், மொரட்டுவை.**
**தொ.பே: 0719439740**

தபால் மூல ஆங்கிலப் பாடநெறிகள்
ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்.
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
கிளாஸ் போகும் காலம். நேரம் மிகுதி / குருகிய காலம் / ஆங்கில முன் அறிவு தேவையில்லை. வயது கட்டுப்பாடு இல்லை. வீண் கட்டணங்கள் செலுத்த வேண்டாம்
இலவசம் இலவசம் பாடநெறியில் இணையும் உங்களுக்கு
இலவச அழகிய பேக் ஒன்று Dialog Sim Cad (தொலைபேசி இணைப்பு) Spoken English Book மற்றும் Spoken English Video CD என்பன பாடநெறியில் இணையும் எல்லோருக்கும் இலவசமாக வழங்கப்படும்.
பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.
எமது DIPLOMA சான்றிதழ் உங்கள் கல்வித்துறை, மற்றும் தொழில் வாய்ப்புக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு துணையாக அமையும்.
மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 0817 918 981 / 0773 123 523


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையில் வெற்றிபெற

**வாழ்க்கை என்பது ரோஜாப் பந்தல் அல்ல. அந்தவகையில் நாம் சிறுவயது முதல் பல்வேறு சாதனைகளையும் சோதனைகளையும் கடந்து வந்திருக்கின்றோம்.இதனால்,வாழ்க்கையை எதிர்கொள்ள நாம் பல்வேறு சவால்களையும் தோல்விகளையும் எதிர்கொள்ளும் ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும். இது பாடசாலைக் கல்வியிலிருந்து மாறுபட்டதாக இருக்கலாம், வாழ்க்கையை வெற்றிகொள்ள அதன் இலக்கை நோக்கி துணிவுடன் செயற்பட வேண்டும்.**







## தைரியத்தை இழக்காமை

அமெரிக்காவில் வசித்த ஓர் இளைஞனுக்கு வேலையை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன்பின் அவர் அரசியலில் ஈடுபடும் ஆவலில் தேர்தலில் போட்டியிட்டு அதிலும் தோல்வியடைந்தார். அதன்பின் அவர் தமக்கான ஒரு வியாபாரத்தை ஆரம்பித்தபோதிலும் அதிலும் தோல்வியையே கண்டார். அத்துடன், சுகப்படுத்த முடியாத நோயினால் அவரது மனைவியும் அகாலமரணமானார். அவருக்கும் கடும் நரம்புக் கோளாறு ஏற்பட்டது. பின்னைய காலகட்டத்தில் சபாநாயகர் பதவிக்குப்போட்டியிட்டு அதிலும் அவர் தோல்வி கண்டார். அமெரிக்க அரசியல் கட்சியொன்றின் அங்கத்தவராக பெயர் சமர்ப்பித்தபோதிலும் அதிலும் அவர் நிராகரிக்கப் பட்டார். காணி அதிகாரி பதவிக்குப் போட்டியிட்டுத் தோல்வி கண்டார். செனட் சபைக்குப் போட்டியிட்டுத் தோல்வியுற்றார். உப ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட்டும் தோல்வி அடைந்தார். மீள செனட் சபைக்கு போட்டியிட்டும் தோல்வியையே எதிர்கொண்டார். எனினும் அதன் பின் இரு ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் அமெரிக்காவின் ஜனாதிபதியாகத் தெரிவானார். இவ்வளவு தோல்விகளையும் எதிர்கொண்டவர் வேறு யாருமல்ல. ஆபிரகாம் லிங்கனேயாவார். அவரின் இந்த வாழ்க்கை வரலாறு அனைவருக்கும் ஒரு பாடமாகும். தோல்விகளை புதிய கோணத்தில் சிந்தித்துப் பார்த்து செயலாற்ற வேண்டும். தோல்வி என்பது தோல்வி அல்ல வெற்றிக்கான வாய்ப்பு. உங்களுக்கு கிடைக்கவில்லை என்பதே அதன் அர்த்தமாகும். தோல்விகள் என்பது வெற்றிக்கான பாடமாகும். அதிலிருந்து நாம் பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும்.

# இவர்களை முன் உதாரணமாகக் கொள்ளுங்கள்




## வெற்றியின் பாதை

ஒரு விடயத்தை உங்களால் ஒருபோதும் வெற்றிகரமாகச் செய்ய முடியாது என்று கருதாமல் அதனை வேறு வழிமுறைகளைப் பயன்படுத்திச் செய்யமுடியும் என்று கருதி செயலாற்றுவதே அவசியமாகும். தோல்வி என்பது உங்களின் பலவீனத்தை வெளிக்காட்டவில்லை. மாறாக, அது இன்னும் நீங்கள் சரியாக செயற்படவில்லை என்பதனையே வெளிப்படுத்துகின்றது. தோல்விகளைக் கண்டு துவண்டு விடாமல் புதிய பாதையில் வாழ்க்கைப் பயணம் மேற்கொள்ளப்பட வேண்டும் என சிந்திக்கத் தூண்டுவது தோல்வியின் அடிப்படையாகும். வாழ்க்கையின் இலக்குகள் என்றுமே நிறைவேற்ற முடியாதவை அல்ல. அது நீங்கள் எண்ணுவதைவிட சில காலப் பகுதியை எடுக்கும் என்பது மட்டுமே உண்மை.

உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி ஐன்ஸ்டைன் தனது வாழ்க்கையை லிகிதராகவே ஆரம்பித்தார். நாம் ஆராய்ந்து பார்த்த ஆபிரகாம் லிங்கனும் ஒரு ஏழை விவசாயியின் மகனாவார். இஸ்ரேல் ஜனாதிபதியான கோல்டா மேயர் ஒரு பாடசாலை ஆசிரியையாவார். கிரேக்க பெரும் எழுத்தாளர் ஓமருக்கு கண் பார்வை இல்லை. உலகப் புகழ்பெற்ற எழுத்தாளர் ஹெலன் கெல்லர் வாய் பேச முடியாத, காது கேளாத, கண் பார்வையற்ற பெண்ணாவார். இசை மேதை பீத்தோவன் காது கேளாதவர். விளையாட்டில் 150 தங்கப்பதக்கங்களைப் பெற்ற பெண்ணான மாலத்தி ஹொல்லா ஓ போலியோ நோயாளி. அவர் 25 முறை சத்திர சிகிச்சைக்குட்பட்டுள்ளார். ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் 'விசேட பிரஜைகள்' என்ற நூலில் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ள உலகப்புகழ் பெற்ற நீச்சல் வீராங்கனை சி.என்.ஜானகி இரு கால்களும் செயற்பாடு அற்ற போலியோ நோயாளியாவார்.

## இல்லை, முடியாது என்று கூறாதீர்கள்

உலக மக்களை ஒன்றுபடுத்தும் இந்த உலகமயமாதல் நிகழ்வில் இந்த நபர்கள் அனைவரும் எமக்கு வாழ்க்கை தொடர்பான சிறந்த பாடத்தையே வழங்கியிருக்கின்றனர். இயலாமையைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பதனை விட அதனை முறியடித்து, தன்னம்பிக்கையுடன் செயலாற்றுவதே அவசியமாகும். மற்றவர்களைக் குறை கூறுதல், அவதூறுப்படுத்தல், விமர்சனம் செய்தல் என்பனவற்றைக் கைவிட்டு சிறுவயது முதல் திறமைவாய்ந்த சிறந்த பிரஜையாக நாம் உருவாகவேண்டும். ஆர்வத்துடன் ஒரு பணியில் ஈடுபட்டு இல்லை, முடியாது என்ற வார்த்தைகளை கைவிட வேண்டும். இந்த மாற்றங்களையும் நாமே உருவாக்கிக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேற்றுக்கிரகவாசிகளின் பூமிக்கான விஜயம்

அடையாளம் தெரியாத பொருட்கள் விண்ணிலிருந்து பூமியை நோக்கி வருவதும், பின் மாயமாக மறைவதும் கடந்த 60 ஆண்டுகாலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற விடயமாகத்தான் உள்ளது. இலங்கை உள்ளிட்ட பல்வேறு நாடுகளும் இந்த விநோத அனுபவத்துக்கு முகம் கொடுத்துள்ளன. அண்மையில்கூட இலங்கையின் பொலன்னறுவைப் பகுதியில் இரவு நேர வானில் இவ்வாறான மர்மப்பொருளொன்று சஞ்சரிப்பதை அங்குள்ள சிலர் அவதானித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், 1947 ஆம் ஆண்டு அமெரிக்காவின் நியூமெக்ஸிகோவில் ரொஸ்வெல் என்ற இடத்தில் விமானப் படைத்தளத்தில் வேற்றுக்கிரக விண்கலம் போன்றதொரு பொருள் உடைந்த நிலையில் விழுந்து கிடந்தது. உலகம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்திய முதலாவது UFO (Unidentified Flying Object-அடையாளம் கண்டறியப்படாத பொருள்) நிகழ்வு அதுதான். அந்நிகழ்வுக்குப் பின் ரொஸ்வெல் சம்பவம் (Roswell Incident) என்றாலே அது UFO வைக் குறிக்கும் நிகழ்வாக பிரபல்யமடையலாயிற்று. ஆயினும், எந்த நாடும் இந்நிகழ்வுகள் குறித்த அதிகாரபூர்வமாக செய்திகளை வெளியிட்டதில்லை.

**'1947 ஆம் ஆண்டு அமெரிக்காவின் நியூமெக்ஸிகோவில் ரொஸ்வெல் என்ற இடத்தில் விமானப் படைத்தளத்தில் வேற்றுக்கிரக விண்கலம் போன்றதொரு பொருள் உடைந்த நிலையில் விழுந்து கிடந்தது. உலகம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்திய முதலாவது நிகழ்வு அதுதான்'**

எனினும், முதன்முறையாக இங்கிலாந்தின் பாதுகாப்பு அமைச்சகத்தின் அதிகாரபூர்வ இணையத்தளமான தேசிய ஆவணக் காப்பகத்தின் இணையத்தளத்தில், 1978 இலிருந்து 1988 வரையிலான பத்தாண்டு கால UFO நிகழ்வுகளை கடந்த ஆண்டில் வெளியிட்டிருந்தது. வானில் விநோத வெளிச்சங்கள் தோன்றியதையும், அது என்னவென்று சரிவர விவரிக்கப்படாத அந்தப் பொருட்களை பொது மக்களும் ராணுவத்தினரும் காவல் துறை அதிகாரிகளும் கண்ணுற்றுள்ளனர் என்றும் அதில் விவரிக்கப்பட்டிருந்தது.

அந்த இணையத்தளத்தில் பதிவாகியிருந்த ஒரு சம்பவத்தில், அல்கார் என்ற மனிதர் 1981 இல் வேற்றுக்கிரகவாசிகள் சிலரால் கொல்லப்பட்டதாக இங்கிலாந்தின் எழுத்தாளர் ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார் என்று பதியப்பட்டுள்ளது. இது போன்ற பலரது வாக்குமூலங்கள் அடங்கிய அந்த ஆவணம், எட்டுக் கோப்புகளாக இப்போது வெளியிடப்பட்டுள்ளது. மொத்தம் 200 கோப்புகள் இருப்பதாகவும் ஏனைய கோப்புகள் பகுதிவாரியாக அடுத்த நான்கு ஆண்டுகளில் வெளியிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி, இணையத்தளத்தைப் பதிவிறக்கம் செய்யக் கட்டணம் அறவிடப்படுகின்றது.

இத்தனை காலமும் ரகசியமாகப் பாதுகாக்கப்பட்ட இந்த விபரங்கள், தகவலறியும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கிலேயே தற்போது வெளியிடப்பட்டிருக்கின்றன. மேலும், பாதுகாப்பு அமைச்சகத்தின் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யும் விதமாகவும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



குறித்த இணையத்தளத்திலுள்ள மற்றுமொரு சம்பவமானது பின்வருமாறு அமைந்துள்ளது. 1983 இல் முதியவர் ஒருவர் ஹாம்ஸ்பைரில் பேசிங்ஸ்டோக் கால்வாயை ஒட்டிய இடத்தில் நடந்து சென்றபோது ஓர் அயல்கிரகவாசியைப் பார்த்தாராம். அது, அவரை தாங்கள் வந்திறங்கிய விண்கலத்துக்கு அழைத்துச் சென்று காண்பித்ததாம். அவரையும் தங்களுடன் அழைத்துச் செல்ல எண்ணி, அவரிடம் சில கேள்விகளை சைகை மொழியில் கேட்டதாம். அப்போது அவரது வயது 52 என்றறிந்து, ''எங்கள் தேவைக்கு நீங்கள் லாயக்கில்லை'' என்று கூறிவிட்டு விண்கலத்தைக் கிளப்பி பறந்து சென்றுவிட்டதாம்.

இதுதவிர, 1987 முதல் 1993 வரை நடைபெற்ற நிகழ்வுகளின் தொகுப்பினையும் குறித்த இணையத்தளம் அண்மைக் காலத்தில் வெளியிட்டுள்ளது. அதில் ஒரு பதிவொன்றில் விமானியொருவர் விமான நிலைய கட்டுப்பாட்டுக் கோபுரத்திலிருந்து வானை பார்த்தபோது 'பூமராங்' விடிவிலான ஓர் அந்நிய விண்கலம் தென்பட்டது என்றும் மற்றோர் இடத்தில் பிரகாசமான கோள வடிவிலான விண்கலம் ஒன்றினை ஒரு பெண் பார்த்திருக்கிறார் போன்ற விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதேவேளை ஃபோக் என்ற பகுதியில் வசிக்கும் ஒரு பெண்ணிடம், குறித்த விண்கலத்திலிருந்து இறங்கிய வெளுத்த தலைமுடிகொண்ட வேற்றுக்கிரகவாசிகள், வேற்றுக்கிரகத்திலிருந்து தாங்கள் சும்மா ஒரு வேடிக்கைக்காகத்தான் பூமிக்கு வந்ததாகச் சொன்னதாம்.

இதேபோன்று மற்றுமொரு சம்பவம் குறித்து விவரிக்கையில், பர்த்ஷயர் என்ற பகுதியில் RAF ஜெட் விமானம் ஒன்று பறந்து சென்ற வான்வழி அருகில் வைர வடிவில் ஒரு கலம் சுற்றிக்கொண்டிருக்கிறது என்றும் பல்வேறு ஆவண வெளியீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

''இந்த ஆவண வெளியீடுகளானது, அடையாளங்காணப்படாத மற்றும் வேற்றுக்கிரகவாசிகள் பற்றிய சங்கதிகளை மேலும் விளங்கிக்கொள்ள உதவும்'' என்று UFO நிபுணரும் ஷெஃபீல்ட் ஹேலெம் பல்கலைக்கழகத்தின் இதழியல் விரிவுரையாளருமான டொக்டர் டேவிட் க்ளார்க் கூறியுள்ளார். எவ்வாறாயினும், 60 ஆண்டுகாலமாகத் தொடரும் புதிருக்கு இனியாவது விடை கிடைக்குமா? என்பது இன்னும் சந்தேகத்துக்குரியதாகவே இருக்கின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் மறைந் கொரில்லா இனப்




**மனித உருவத்திற்கு ஒத்த தோற்றத்தைக் கொண்ட விலங்கினமே கொரில்லாக்கள். இந்த கொரில்லா இனம் ஆபிரிக்காவின் அடர்ந்த காட்டுப் பிரதேசங்களில் வாழ்கின்றது.**

திரைப்படங்களில் அல்லது விவரணச் சித்திரங்களில் நடித்து வந்த கொரில்லாக்களின் அரசன் என்றழைக்கப்பட்ட டைடாஸ் என்ற கொரில்லா அண்மையில் உலகில் இருந்து விடைபெற்றுச் சென்றுவிட்டது. இது இறக்கும் தருவாயில் ருவண்டாவில் வாழ்ந்து வந்தது. கடந்த பல வாரங்களாக நோய் வாய்ப்பட்டிருந்ததால் மரணமடைந்ததாக ருவாண்டாவின் வனபரிபாலன பாதுகாப்பு அதிகாரிகள் அறிவித்தனர்.

இந்த பிரமாண்டமான கொரில்லா 200 கிலோகிராம் வரையான எடையுடையதாகும். உலகப் புகழ்பெற்ற சூழலியல் ஆய்வாளரும் கொரில்லாக்களின் வாழ்க்கை பற்றிக் கூடுதலாக அக்கறை செலுத்துபவருமான டயான் பொசி இந்த கொரில்லாவைப் பற்றி ஆராய்ந்து பல தகவல்களை சேகரித்துள்ளார். 1970 ஆம் ஆண்டு முதல் அவரின் குழுவினர் இந்த டைடஸ் என்ற கொரில்லா பற்றிய ஆராய்ச்சியையும் கண்காணிப்பையும் ஆரம்பித்தனர்.

இந்த கொரில்லாவின் நல்லடக்கம் ருவண்டாவில் உள்ள கொரில்லா மயானத்தில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ருவண்டாவில் 'கரிகோகே' என்ற மலைப்பகுதியில் கொரில்லாக்களுக்காக தனியான மயானம் ஒன்று இருக்கின்றது. வேட்டைக்காரர்களின் கவனயீனத்தால் அல்லது வேறு காரணத்தால் இறக்கும் கொரில்லாக்களின் உடல்கள் இந்த மயானத்தில்தான் அடக்கம் செய்யப்படுகின்றன.

டைடஸ் கொரில்லா இறந்தவுடன் அதன் ஏனைய சக கொரில்லாக்கள் அதனைச் சூழ்ந்து கொண்டு மிகுந்த சோகத்தில் இருந்த காட்சிகள் அந்நாட்டு தொலைக்காட்சிகளில் காட்டப்பட்டுள்ளன. இதற்கு முன்னர் பொசி என்ற பிரசித்தம் பெற்ற இன்னொரு கொரில்லா அங்கு வாழ்ந்து வந்ததாயினும் 1985 ஆம் ஆண்டு வேட்டைக்காரர்களால் அந்த கொரில்லா கொல்லப்பட்டது. அதன் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ள இடத்திற்கு அருகிலேயே டைடஸ்ஸின் உடலும் புதைக்கப்பட்டது.

'கொரில்லா இன்த மிஸ்ட்' என்ற திரைப்படம் மூலம் உலகிற்கு அறிமுகமான டைடஸ் என்ற இக்கொரில்லா இன்னும் பல திரைப்படங்களிலும் நடித்துப் புகழ் பெற்றுள்ளது. இறுதியாக 2008 ஆம் ஆண்டு பீ.பீ.சி நிறுவனம் தயாரித்த குறுந்திரைப்படம் ஒன்றில் நடித்தது. இந்த டைடஸ் நடிப்புக்கு நன்கு பழக்கப்பட்ட ஒரு விலங்காகும். இறுதியாக நடித்த திரைப்படம் 'டைடஸ் த கொரில்லா கிங்' (Titus the Gorilla King) என்பதாகும்.

அத்துடன், கொரில்லா இனங்களை ருவண்டாவில் வேட்டைக்காரர்களிடம் இருந்து பாதுகாப்பது என்பது பெரும் பிரச்சினையாகவே இருந்து வருகின்றது. இறைச்சிக்காகவும் கண்கள், எலும்புகளைப் பெறுவதற்காகவும் கொரில்லாக்கள் அதிகமாக வேட்டையாடப்படுகின்றன. எலும்புகளைக் கொண்டு ஆபரணம், அலங்கார அணிகலன்கள் செய்யப்படுகின்றன. அவை ஆபிரிக்க மற்றும் மேற்கு நாடுகளில் நன்கு விற்பனையாகின்றன.

இதனால், இவை வேட்டையாடுபவர்களினால் அழிந்து போகாமல் பாதுகாப்பது என்பது பெரும் சவாலான விடயமாகும் என்று கொரில்லாப் பாதுகாப்பு ஆர்வலரான ருகும்பா கூறுகின்றார். ருவண்டா, உகண்டா, கொங்கோ ஆகிய பகுதி மலைக்காடுகளில் பிரமாண்டமான இனக் கொரில்லாக்கள் வாழ்கின்றன. மொத்தம் இத்தகைய 700 கொரில்லாக்கள் அளவில் அங்கு வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

உகண்டாவிலும் ருவாண்டாவிலும் உல்லாசப் பயணத்துறையில் கொரில்லாக்கள் முக்கிய அங்கமாக இருந்து வருகின்றன. இதனால், உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்திருக்கின்றது. 1994 ஆம் ஆண்டு அந்நாட்டில் நிகழ்ந்த மனிதப் படுகொலைகள் காரணமாக சர்வதேச அரங்கில் அதன் கீர்த்திக்கு களங்கம் ஏற்பட்டிருந்த நிலை மறைந்து இப்போது மீண்டும் உல்லாசப் பயணிகளைக் கவர்ந்த இடமாக ருவாண்டா மாறியிருக்கின்றது.

## கொரில்லாக்களை அடையாளம் கண்டபோது

கொரில்லாக்கள் குழுவாகவே சஞ்சாரம் செய்கின்றன. ஒரு குழுவில் 16-30 வரையான கொரில்லாக்கள் உள்ளன. கூட்டத்தின் தலைவனாக வயது முதிர்ந்த கொரில்லாக்குரங்கு இருக்கும். சில பெண் கொரில்லாக்களும் குட்டிகள் சிலவும் ஒரு கூட்டத்தில் இருக்கும். ஆனாலும், குட்டிகள் 14 வயது வரையுமே கூட்டத்தில் இருக்கும்.

இந்த கொரில்லாக்களில் மூன்று வகையான இனங்கள் உள்ளன. மேற்கு ஆபிரிக்க பிராந்தியத்தில் வாழும் கொரில்லாக்கள், கிழக்கு ஆபிரிக்கா சமவெளிகளில் வாழும் கொரில்லாக்கள், (மன்யெமா) கிழக்கு ஆபிரிக்க மலைச்சாரல் பகுதிகளில் வாழும் கொரில்லாக்கள் என்று அவை வகைப் படுத்தப்படுகின்றன. ஆனாலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# து வரும்







டைடஸுடன் டயென் பொசி

ஆபிரிக்காவின் அடர்ந்த காடுகளில் ஒரே ஒரு இனக் கொரில்லாக்கள் மட்டுமே வாழ்கின்றன.

## அப்பாவிகள்

கொரில்லாக்கள் பார்வைக்குப் பயங்கரமான மிருகங்கள் போன்று தென்பட்டாலும் அவை இயல்பாகவே மிக அப்பாவித்தன்மை உடையவையாகும். அவை கோபம் ஏற்பட்டால் மட்டுமே சண்டை போடுகின்றன. அவை சண்டை போடும்போது கடும் சினம் ஏற்பட்டால் நெஞ்சை இரண்டு கைகளாலும் அடித்துக் கொள்வதோடு மரம் இலைகுழைகளைக் கிழித்து துண்டம் துண்டமாக்குகின்றன. அத்துடன், வேகமாக ஓடவும் செய்கின்றன. உடல் பருமன் அதிகமாக இருப்பதோடு நடப்பதற்கு ஏதுவாக கால்கள் பலமாக இருக்கின்றன. மனிதர்களுக்கு போன்றே பெருவிரல்களும் உள்ளன.

## தோற்றம்

ஆண் கொரில்லா 1.8 மீற்றர் உயரமும் 180 கிலோகிராம் வரையான எடையும் கொண்டதாக இருக்கும். பெண் கொரில்லா ஆணை விட உயரம், நிறை குறைவாக இருக்கும். ரோமம் கறுப்பாகவும் உச்சந்தலையில் ரோமம் கறுப்பு, செந்நிறம் கலந்ததாகவும் இருக்கும்.

10 வயது அளவான கொரில்லாவின் உடம்பில் பொன்னிற ரோமங்கள் காணப்படும். இவை 'வெள்ளி மேனி' உடைய கொரில்லாக்கள் என்றழைக்கப்படுவதுண்டு. அல்லது 'பொன் உரை' என்றும் அழைக்கப்படுவதுண்டு. இவற்றின் அடிவயிற்றில் ரோமம் காணப்படுவதில்லை. மிகவும் சிறிய ஆண் கொரில்லாவின் உடலில் கருமை நிறமான ரோமம் உள்ளது இது 'பிளக் பேக்' என்றழைக்கப்படுகின்றது.

## வெள்ளித்திரையை வென்றெடுத்த கொரில்லா

ஹொலிவூட் சினிமா கலாசாரம் ஆரம்ப காலம் முதலே பிரமாண்டமான கொரில்லாக்களும் திரையில் அறிமுகமாகிவிட்டன. முக்கியமான பாத்திரத்தை ஏற்று நடித்த 'கிங்கொங்' என்ற பிரமாண்டமான கொரில்லா முக்கியமானதாகும். இந்தப் பாத்திரம் உள்ள திரைப்படம் முதலில் 1930 ஆம் ஆண்டு வெளியாகியது. இந்த திரைப்படம் 2005 ஆம் ஆண்டு பீட்டர் ஜக்சன் என்பவரால் மீண்டும் மீள் தயாரிப்பு செய்யப்பட்டது.

விஞ்ஞான நாவல்களை எழுதும் மைக்கல் கிரய்டன் கொங்கோ என்ற பெயரில் அபூர்வமான திரைக் கதை ஒன்றைத் தயாரித்தார். 1933 ஆம் ஆண்டு பிரான்க் மார்ஷல் இக்கதையை அடிப்படையாகக் கொண்டு 'கொங்கோ' என்ற திரைப்படத்தைத் தயாரித்தார். மற்றொரு பிரமாண்டமான கொரில்லாவை மையமாக வைத்து தயாரிக்கப்பட்ட திரைப்படம்தான் 'மைட் ஜோ யங்' என்பதாகும். இத்திரைப்படம் 1998 ஆம் ஆண்டு திரையிடப்பட்டது.

## கொரில்லாக்களுக்காக உயிரைத் தியாகம் செய்த டயன்பொசி

இறந்துபோன உயிரினங்களின் தடயங்கள் தொடர்பாக ஆய்வு நடத்தும் டயன்பொசீ என்பவர் பிரபல விஞ்ஞானியான லிகீயின் மாணவியாவார். இவர்களின் சந்திப்பு மிகவும் அபூர்வமான முறையில் நிகழ்ந்ததாகும். லிகீயால் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட கலங்கள் பற்றி அறிந்து கொள்வதற்காக பொசீ சென்றிருந்தார். அப்போது அந்த தடயம் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் அங்குமிங்கும் நடந்து கொண்டு இருந்தபோது கால்கள் தடுமாறிக் கீழே விழுந்துள்ளார். அதனால் அவருக்கு வேதனை ஏற்பட்டது. அந்த வலி காரணமாக லிகீயால் கண்டுபிடிக்கப்பட்டிருந்த எச்சங்கள் மீது அவர் வாந்தி எடுத்தார். அந்த வேளையில்தான் இவர்கள் இருவரும் சந்தித்துக் கொண்டனர்.

லிகீயின் வழிகாட்டலின்கீழ் இருவரும் வானர மனிதன் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ள ஆபிரிக்கா சென்றனர். பொசீ 15 வருடங்களுக்கு மேலாக கொரில்லாக்கள் பற்றி ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார். அவர் திரட்டிய தகவல்களில் கொரில்லாக்கள் பற்றிய முக்கிய தகவல்கள் இருந்தன. கொரில்லாக்கள் சண்டை போடுவது அவற்றின் குட்டிகளைக் காப்பாற்ற மட்டுமே என்பது அவர் திரட்டிய தகவல்களில் அடங்கும்.

அத்துடன், ஒரு கொரில்லாக்கூட்டத்தில் 23 கொரில்லாக்கள் வரை இருக்கும் என்றும் அந்த குழுவிற்கு முதுமையடைந்த 'பொன்னிற மேனி' கொரில்லா தலைமை தாங்குகிறது என்ற தகவலையும் அவர் வெளியிட்டார். 1985 ஆம் ஆண்டு அவர் ருவாண்டாவில் கூடாரமிட்டு கொரில்லாக்கள் பற்றிய ஆய்வில் ஈடுபட்டிருந்தபோது கொலை செய்யப்பட்டார். அவரது கொலை இன்று வரையில் மர்மமாகவே இருந்து வருகின்றது. இறக்கின்றபோது அவருக்கு வயது 53.


## கொரில்லாக்களின் வாழ்க்கை


கொரில்லாக் கூட்டம் 15 கி.மீ எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் அலைந்து திரிந்து கொண்டிருக்கும். உறங்குவதற்காக பற்றைக்காடுகளில் இடம் அமைத்துக்கொள்ளும்.இவ்வாறு அமைத்துக்கொள்ளும் இடத்தில் ஓர் இரவு மட்டுமே உறங்குகின்றன. இவை தினமும் ஒரே இடத்தில் உறங்குவதில்லை. கூட்டத்தின் தலைவர் உறங்குவதற்கான இடத்தை ஏற்பாடு செய்துகொண்ட பின்னர் தான் குழுவில் உள்ள ஏனைய கொரில்லாக்கள் உறைவிடத்தை ஏற்பாடு செய்கின்றன.

நன்கு வளர்ந்த பெண் கொரில்லா 4 வருடங்களுக்கு ஒருமுறை இனப்பெருக்க செயற்பாட்டில் ஈடுபடுகின்றது. அடுத்த குட்டி ஈனும்வரையில் பிறந்த குட்டிக்கு தாயின் அரவணைப்புக் கிடைக்கின்றது. கொரில்லாக்கள் மாமிச உண்ணிகள் அல்ல. தாவர உண்ணிகளாகும். இலை,குழைகள், காய்கனிகள், கிழங்கு வகை, மரத்தோல், பட்டை, பழங்கள், பூக்கள் என்பன இவற்றின் பிரதான உணவாகும்.

**அமீர் ஹுசைன்**


பீட்டர் ஜெக்சனின் 'கிங்கொங்' திரைப்படத்தில் ஒரு காட்சி



மைட்டி ஜோ யங் திரைப்படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரேந்தையாளர் எனும் வரிமுகவர்

**பண்டைய இலங்கையில் இன்றுள்ளதைப் போன்று பல்வேறு வரி அறவீட்டு முறைகள் இருந்துள்ளன. எனினும், அவை இன்றுள்ள வரி அறவீட்டு முறைகளைவிட சற்று வித்தியாசமானவை.**

அதில் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட 'ரேந்த' என்று கூறப்படும் 'ரேந்தை வரி' குறிப்பிடத்தக்கதாகும். அரச வரி அறவிடல், அறவிட்ட வரியில் மக்களின் தேவைகளை நிறைவேற்றல், பொருட்களை விநியோகித்து வருட லாபம் பெறல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தமையினாலேயே இந்த வரி 'ரேந்தை வரி' எனப் பெயர் பெற்றது.

இத்தகைய ரேந்தை முறைதான் இலங்கையில் புதிய பிரபுக்களையும் அநேக செல்வந்தக் குடும்பங்களையும் உருவாக்கியதோடு, முதலாளித்துவ சமூகமொன்று உருவாக முதற் காரணமாகவும் அமைந்தது.

## ரேந்தை முறைகள்

அரசு கூறும் காரியத்தை நிறைவேற்றவும் பொருட்களை விநியோகிக்கவும் வரியைச் சேகரிக்கவும் ஒருவருக்கு வழங்கப்படும் பொறுப்பே ரேந்தையாகும். அது பாலத்துக்காகவோ, கோழிப்பண்ணைக்காகவோ, மது விற்பனைக்காகவோ அல்லது வயல் அறுவடை வரியாகவோ இருக்கலாம். வருடாந்தம் கேள்விப்பத்திரம் கோரப்பட்டு, அதிக தொகை குறிப்பிடுபவருக்கு அரசால் ரேந்தை விற்கப்படும். அதை வாங்கியவர் அதன்மூலம் லாபம் ஈட்டிக் கொள்வார். இதனால், நாட்டின் பல பாகங்களிலும் செல்வந்தர்களே பெருகினர். இதற்குப் போட்டியும் நிலவியது.

அந்தவகையில் மதுபான ரேந்தையே ஆதாயம் கூடியதாகும். அதன்படி, 1829 இல் 38 பவுன்களுக்கு மதுபானக் கடை ரேந்தையை வாங்கிய ஒருவர், ஏழு வருடங்களுக்குப் பின் 6800 பவுன்களுக்கு குறித்த ஒரு மாகாணத்தின் அனைத்து மதுபானக்கடைகளையும் ரேந்தைக்கு வாங்கியதாகவும் குறித்த அந்த ரேந்தையாளர் குறுகிய காலத்தில் நாட்டின் பெரிய செல்வந்தரானார் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

நேரடியாக வரி அறவிடுவதை விடவும் இந்த ரேந்தை விற்பனை முறை மூலம் அரசுக்குக் கூடுதலான லாபம் கிடைத்தது. எனினும், நேரடியாக அரசு தலையிட்டு வரி வசூலிக்கும்போது விவசாயிகளும் மீனவர்களும் குழப்பத்துக்கு ஆளாகினர். அதனால்தான் வரிமுகவரை நியமித்து வரி அறவிடும் பணியை ஆங்கிலேயர் அறிமுகப்படுத்தினர்.



## தனியாரிடம் அரசவரி அறவிடும் பணி ஒப்படைப்பு

மன்னர் காலத்தில் நெல்வரி, மீன்வரி என்றெல்லாம் அரசுக்கு வருமானத்தை பெற்றுத்தரும் வரிகள் வசூலிக்கப்பட்டன. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களிலும் இதே நடைமுறைதான் காணப்பட்டது. எனினும், ஆங்கிலேயர் வரி செலுத்துவோரின் தொல்லைகளைத் தவிர்ப்பதற்காக வருடாந்த வரியை அறவிடவும் அதைப் பெற்றுக்கொள்ளவும் தனியார் முகவர் சிலரிடம் இப்பொறுப்பை ஒப்படைத்திருந்தனர். தெருக்கள், பாலங்கள், துறைமுகங்கள், சூதாட்ட நிலையங்கள், கோழி வளர்ப்புப் பண்ணைகள், மதுபான நிலையங்கள் ஆகியவற்றை நிறுவி, அவற்றை நிர்வகிக்கவும் அதிகாரம் வழங்கினர்.







## ரேந்தை அறவீட்டினால் பொதுமக்கள் பட்ட அவதி

ரேந்தை முறை பொதுமக்களின் குருதியை உறிஞ்சும் ஒரு நடவடிக்கையாக குற்றச்சாட்டுக்கள் எழுந்தபோதும், ரேந்தையாளர்களின் வலிமை, செல்வாக்கு என்பனவற்றின் முன்னால் பொதுமக்களால் எதுவும் செய்யமுடியாது போனது. 1810 இல் ரேந்தை மூலம் கிடைத்த வருமானம் 22,000 ரிக்ஸ் டொலர்களாகும். அதில் 11,800 ரிக்ஸ் டொலர்கள் மீன் ரேந்தையால் கிடைத்ததாகும். இதன் மூலம் அரசு தனது வருடாந்த வருமானத்தில் பெரும் தொகையை ரேந்தை முறை மூலம் பெற்றிருப்பது தெளிவாகிறது. எனவேதான் ரேந்தையாளரின் செயற்பாடுகளை ஆங்கிலேயர் கண்டும் காணாதது போல் இருந்தார்கள்.

ரேந்தையாளர்கள் காணி உரிமையாளர்களோடு மட்டுமன்றி, தொழிலாளர்களோடும் மோதிய கொடூர இடைத்தரகர்களாகவே காணப்பட்டனர். தாம் விரும்பியவாறு வழக்குத் தாக்கல் செய்யவும் பணம் பறிக்கவும் அரசு வழங்கிய அதிகாரங்களைத் தவறாகப் பாவித்தனர்.

ரேந்தை வரிகளில் விவசாய வரி கொடூரமானதாகும். விவசாயி பத்தில் ஒரு பங்கு வருமானத்தை ரேந்தைக் காரனுக்குக் கொடுக்க வேண்டும். அரசின் விவசாய மதிப்பீட்டாளர் முன்கூட்டியே வயலைச் சோதித்து, அறுவடைக்குமுன் பெறுமதியை நிர்ணயித்து, அரச முகவருக்கு அறிக்கை சமர்ப்பிப்பார். அவர்களின் மதிப்பீட்டுக்கமைய விவசாயி வரியை செலுத்தவேண்டும். அறுவடை நெல்லை வேறிடத்துக்குக் கொண்டு செல்லவும் தடை விதிக்கப்பட்டிருந்தது. ரேந்தைக்காரன் வயலுக்கு வரும்போது அவனுக்கு லஞ்சம் கொடுக்கவும் வேண்டும். அவ்வாறே, ரேந்தையாளன் வரும்வரை மீனவனால் மீனை விற்கமுடியாது. அதில் ஒரு பங்கை ரேந்தையாளனுக்குக் கொடுக்கவேண்டும்.

எவ்வாறாயினும், நாளடைவில் பொதுமக்கள் இதனால், பல்வேறு துன்பங்களை அனுபவித்ததோடு, எதிர்ப்புகளும் வெளிப்பட்டன. இதன் காரணமாக காலப்போக்கில் இந்த வரி அறவீட்டு முறை நீக்கப்பட்டது.

**ஏ.ஜே.எம்.நிழாம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்துடன் மலேசியாவுக்குச் செல்ல என்னை சரியாக வர்ணந்தீட்டுங்கள்..!




இப்போது எனது காற்சட்டை நீல நிறம். ஷேர்ட் சிவப்பு நிறம். முதலிரண்டு மாத சீட்டிழுப்புகளுக்கும் கூப்பன்கள் கையளிக்கும் காலம் இத்துடன் நிறைவு பெற்றுவிட்டது. எஞ்சியுள்ள பகுதிகளை சரியான முறையில் வர்ணந்தீட்டி விரைவாக அனுப்பி வைத்து நீங்களும் வெற்றியாளர்களாகுங்கள்.

Homerun PAS

COLOUR ME

COMPETITION

இன்றே நீங்களும் ஹோம்ரன் பஸ் Colour Me போட்டியில் பங்குபற்றி, ஹோம்ரன் பெஸ் பக்கட்டினுள் இருக்கும் **ஹோம்ரன்** சாம்பை வர்ணந்தீட்டி அனுப்பி வைத்து பெறுமதியான பரிசுகளை வெல்லுங்கள். நீங்கள் வர்ணந்தீட்டிய ஹோம்ரன் சாம்பின் நிறம், இலங்கங்களிடப்பட்ட எமது சாம்பின் பகுதிகளுடன் பொருந்தினால் ஹோம்ரன் பெஸ் மூலமாக கைநிறையப் பரிசுகள்.

## மாபெரும் இறுதிப் போட்டி

சகல பிரிவுகளிலும் எமது சித்திரத்தை ஒத்ததாக வர்ணம் தீட்டி அனுப்பும் உங்களுக்கு, இறுதிச் சீட்டிழுப்பில் பங்குபற்றும் வாய்ப்பு கிடைக்கும். **ஒக்டோபர் 15ஆந் திகதி முதல் ஜனவரி 15ஆந் திகதி வரை** அனுப்பப்படும் சரியான சகல கூப்பன்களும் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும்.

மாபெரும் இறுதிச் சீட்டிழுப்பில் தெரிவுசெய்யப்படும் **முதலாவது வெற்றியாளர் குடும்பத்துடன் (தாய் மற்றும் தந்தை)** மலேசியாவில் வோட்டர் வேர்ள்ட் சுற்றுலா மேற்கொள்வார். மேலும் 10 வெற்றியாளர்களுக்கு பைசிக்கிள்களும் அத்துடன் நான்கு பேருக்கு வரைதல் உபகரணங்களும் இன்னும் 05 பேருக்கு MP3 பிளேயர் மற்றும் ஏனைய வெற்றியாளர்களுக்கு பெறுமதியான 400 ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும் - தொலைபேசி இலக்கங்கள் 011 3 198080, 011 2 925658 அல்லது 0772 398671.

ஹோம்ரன் பெஸ் Colour Me வர்ணந்தீட்டும் போட்டி
வரையறுக்கப்பட்ட கலர் புரடக்ட்ஸ்,
இல. 437/4 த.பெ.இல. 10,
றாகம வீதி, கடவத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பங்களாதேஷ்

தேசிய இலச்சினை

டாக்கா நகர்

**அரசு:** நாடாளுமன்றக் குடியரசு.
**சுதந்திரம்:** பாகிஸ்தானிடம் இருந்து பிரிவினைப் பிரகடனம்-26 மார்ச் 1971; வெற்றி நாள்-16 டிசம்பர் 1971.
**தேசிய விடுமுறை தினம்:** சுதந்திர தினமாகிய மார்ச் 26.
**ஜனாதிபதி** (2009): ஸில்லுர் ரஹ்மான்.
**பிரதமர்** (2009): ஷேக் ஹஸீனா.

## புவியியல்

பங்களாதேஷ் வங்காள விரிகுடாவின் வடகரையில் அமைந்துள்ளது. இதன் பெரும் பகுதி கங்கையாற்றின் கழிமுகப் பகுதியாகும். இதன் மேற்கு, வடக்கு மற்றும் கிழக்கு உள்ளிட்ட பெரும்பகுதி இந்தியாவால் சூழப்பட்டுள்ளது. தென்கிழக்கில் உள்ள சிறிய பகுதியில் மியன்மாரை எல்லையாகக் கொண்டுள்ளது.

பங்களாதேஷை ஊடுருவிப் பாய்ந்து கழிமுகத்தைக் கொண்டுள்ள நதிகள் கங்கை நதி, பிரம்மபுத்திரா நதி மற்றும் மீஹ்னா நதி என்பனவாகும். அதிக மழைக்காடுகளைக் கொண்ட பங்களா தேஷின் கிழக்கு மற்றும் தென்கிழக்குப் பிரதேசங்களில் சில மலைப் பிரதேசங்கள் காணப் படுகின்றன.


பிரதமர்


ஜனாதிபதி

**மொத்த நிலப்பரப்பு:** 55,598 ச.மைல் (144,000ச.கி.மீற்றர்)
**சனத்தொகை:** 156,050,883.
**தலைநகரமும் பெரிய நகரமும்** (2003): டாக்கா;
**ஏனைய பெரிய நகரங்கள்:** சிட்டகொங், குல்னா.
**உயர் சிகரம்:** கியோக்ராடோங்-4035 அடி. (1230 மீற்றர்)
**தாழ்ந்த மையம்:** இந்து சமுத்திரம்.
**நிலப்பிரிவுகள்:** 6 பிரிவுகள்.
**பிரதான மொழிகள்:** பங்களா (வங்காளி) இது உத்தியோகபூர்வ மொழி மற்றும் ஆங்கிலம்.
**இனங்கள்:** வங்காளி 98%; சக்மா மற்றும் மாக் முதலிய சிறுபான்மை இனக்குழுக்கள், வங்காளிகள் அல்லாத இஸ்லாமியர்கள்.
**சமயம்:** இஸ்லாம் 83%, இந்துக்கள் 16%, ஏனையோர் 1%.
**எழுத்தறிவு:** 43%.
**நாணயம்:** டாக்கா.
**இணையத்தளக் குறியீடு:** .bd.
**சர்வதேச தொலைபேசி இலக்கம்:** 880
**தேசிய சின்னங்கள்:** **மிருகம்**-பங்காளி புலி (Royal Bengal Tiger), **பறவை**-Magpie Robin, **மலர்**-அல்லி, **மரம்**-ஆலமரம், **விளையாட்டு**-கபடி.




## தேசிய கீதம்

Amar shonar Bangla,
Ami tomae bhalobashi.
Chirodin tomar akash,
Tomar batash.......என
ஆரம்பமாகின்றது.

## காலநிலை

கோடைகாலத்தில் நல்ல வெப்பமும் அதேவேளை அதிக மழை வீழ்ச்சியும் கிடைக்கின்றது. பருவக்காற்று காலமாகிய ஜூன் முதல் செப்டெம்பர் வரையிலான காலப்பகுதியிலேயே அதிக மழைவீழ்ச்சி கிடைக்கின்றது.

நொவெம்பர் முதல் பெப்ரவரியிலான குளிர் காலப்பகுதியிலும் மிகக் குறைந்த மழைவீழ்ச்சி கிடைக்கின்றது. மார்ச், ஏப்ரல், மே மாதங்கள் மிகவும் வெப்பமான காலப்பகுதியாகும்.



## வரலாறு

இந்நாடு ஒரு காலத்தில் இந்தியாவின் வடகிழக்குப் பிரதேசத்தில் அமைந்த ஒரு ராச்சியமாக இருந்தது. வங்காள மொழி பேசும் இவர்களில் மேற்குப் பகுதியில் (மேற்கு வங்காளம்) வாழ்ந்த மக்கள் பெரும்பாலும் இந்துக்கள் ஆவர். இவர்கள் இந்தியாவின் அஸாம் மாநில சில்ஹெட் மாவட்டத்துடன் இணைந்தவர்களாவர்.

கி.மு 1000 ஆம் ஆண்டளவில் இருந்து வங்கப் பேரரசாகத் திகழ்ந்த இப்பிரதேசம் பின்னர் பௌத்த ஆட்சியாளர்களால் பல நூற்றாண்டுகள் ஆளப்பட்டது. ஆனால், 10 ஆம் நூற்றாண்டில் இது இந்துக்களைக்கொண்ட இந்து சாம்ராஜ்யமாக உருவெடுத்தது. அதேவேளையில், வங்க ராஜ்யத்தின் கிழக்குப் பகுதி முகலாயர்களால் ஆளப்பட்டமையால், கிழக்கு வங்காளிகள் இஸ்லாமியர்களாக மதம் மாறினர். பின்னர் 1757 முதல் 1947 வரை பிரித்தானியரால் ஆளப்பட்டது.

1971 இல் பாகிஸ்தானிடம் இருந்து சுதந்திரம் பெற்றது. சுதந்திரப் போராட்டத்திற்கு தலைமை தாங்கிய முஜிபுர் ரஹ்மான் இந்தியாவின் உதவியுடன் பங்களாதேஷ் நாட்டை உருவாக்கினார். அவர் சுதந்திர பங்களாதேஷின் முதல் அதிபராக இருந்தபோது 1975 இல் கொல்லப்பட்டார். பின்னர் ராணுவப்புரட்சி தொடர்ந்தது. பின்னர் முன்னாள் அதிபர் ஜெனரல் ஸியாவுல் ரஹ்மானின் மனைவி காலிதா பிரதமரானார்.

1996 இல் முஜிபுர் ரஹ்மானின் மகள் ஷெய்க் ஹஸீனா அதிகாரத்திற்கு வந்தார்.2001 பொதுத்தேர்தலை அடுத்து காலிதாசியா மீண்டும் பிரதமரானார். 2006 இன் இறுதியில் அவரின் பதவிக்காலம் முடிவடைய, 2007 இல் பக்ருதீன் அகமது அரசின் முக்கிய ஆலோசகரானார். தொடர்ந்து ஊழல் குற்றச்சாட்டில் முன்னாள் பிரதமர்கள் இருவரும் அடுத்தடுத்துக் கைது செய்யப்பட்டனர்.

## கலாசாரம்

இந்து, ஜைனிசம், பௌத்தம், இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ மதங்களின் தாக்கத்திற்கு நீண்ட காலமாகவே உட்பட்ட நாடு என்ற ரீதியில், அவை ஒவ்வொன்றினதும் கலாசாரங்களின் பாதிப்புக்கள் இங்கு காணப்படுகின்றது.

## பொருளாதாரம்

**விவசாயம்** (விவசாயத்திற்கேற்ற நிலம் 55.39%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** நெல், தேயிலை, கோதுமை, சடைச்சணல், கரும்பு, கிழங்கு வகைகள், புகையிலை, எண்ணெய் விதைகள், வாசனைத் திரவியங்கள், பழவகைகள், இறைச்சி, பாற்பண்ணைப் பொருட்கள், கோழிப்பண்ணை. **தொழிலாளர் தொகை:** 66.6 மில்லியன். (இதில் விவசாயத்துறை 63% கைத்தொழில் துறை 11% சேவைகள் 26%). **வேலையற்றோர் தொகை:** 2.5%.
**கைத்தொழில்கள்:** பருத்திப் புடவைகள், சடைச்சணல் கைத்தொழில், ஆடைத் தொழிற்சாலைகள், தேயிலை உற்பத்தி.
**இயற்கை வளங்கள்:** இயற்கை வாயு,இயற்கை வளம் நிறைந்த நிலம், பெறுமதியான மர வகைகள், நிலக்கரி. **ஏற்றுமதிகள்:** ஆடைத்தொழில் விளைவுகள், சடைச்சணல் மற்றும் சடைச்சணல் உற்பத்திப் பொருட்கள், தோல் பொருட்கள், மீன், கடல் உணவுகள். **இறக்குமதிகள்:** இயந்திரங்களும் இயந்திர உபகரணங்களும், ரசாயனப் பொருட்கள், இரும்பு மற்றும் இரும்புருக்கு. **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்:** ஐக்கிய அமெரிக்கா, ஜேர்மனி, ஐக்கிய ராச்சியம், பிரான்ஸ், இத்தாலி, இந்தியா, சீனா, சிங்கப்பூர், குவைட், ஜப்பான், ஹொங்கொங்.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்:** பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்: 831,000; **செல்லிடத் தொலைபேசி:** 27781600.
**வானொலி நிலையங்கள்:** AM 15, FM 13, SW 2.
**தொலைக்காட்சி நிலையங்கள்:** 15. **இணையத்தள வழங்குனர்:** 266. **இணையத்தளப் பாவனையாளர்:** 300,000.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்:** மொத்த நீளம் 2706 கி.மீற்றர். **பெருந்தெருக்கள்:** 239,226 கி.மீற்றர். **நீர்வழிப் போக்குவரத்து:** 8372 கி.மீ. **துறையும் துறைமுகமும்:** சிட்டகொங் மொங்லா போர்ட். **விமான நிலையங்கள்** (2005): 16.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில....

✱ டாக்கா விலங்கினக் காட்சிசாலை ✱ தேசிய அரும்பொருட்காட்சியகம் ✱ தாவரவியல் பூங்கா (மிர்புர்) ✱ தேசிய பூங்கா (ராஜேந்திரபுர்) ✱ மத்திய ஷாஹிட் மினார் ✱ ரம்னா பசுமைப் பூங்கா ✱இரண்டாம் உலக மகாயுத்த நினைவுக் கல்லறை ✱ ஃபோய்ஸ் ஏரி ✱ சுந்தர்பான்ஸ் காடுகள் (இது ரோயல் பெங்கால் புலிகளின் புகலிடம்)



இரண்டாம் உலக யுத்த நினைவுக் கல்லறை

ஃபோய்ஸ் ஏரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 4 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் (சென்ற இதழ் தொடர்ச்சி....)

21. பழங்கள், வாழைப்பழம், மரக்கறி என்பவற்றுக்கிடையிலான தொடர்பினைக் காட்டுவதற்கு பின்வரும் உரு வரையப்பட்டுள்ளது. இந்த உருவில் வாழைப்பழத்தைக் காட்டும் எழுத்து யாது?




(1) H (2) T (3) B


22. வீதியொன்றில் நீலம், கறுப்பு, சிவப்பு, பச்சை ஆகிய நான்கு நிறக்கொடிகள் இதே ஒழுங்குகளில் அலங்கரிக்கப்பட்டுள்ளன. 43 ஆவதாக காணப்படும் நிறக்கொடி யாது?


(1) கறுப்பு (2) சிவப்பு (3) பச்சை

23. ஒரு சதுர வடிவக் காணியை ஒரு பக்கத்திலிருந்து அவதானிக்கும்போது 12 தூண்கள் காணப்படுகின்றன. எனில், அக்காணியைச் சுற்றிவர நடப்பட்டுள்ள தூண்களின் எண்ணிக்கை யாது?


(1) 48 (2) 52 (3) 44

★ *பின்வரும் அடைப்பினுள் தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி 24 ஆம், 25 ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.*




24.  எதற்குச் சமம்?

(1) 900ml (2) 1000ml (3) 800ml

25.  எதற்குச் சமம்?

(1) 100ml (2) 400ml (3) 300ml

★ *பின்வரும் சொற்களை வாசிக்க. இதற்கேற்ப 26 ஆம் 27 ஆம் வினாக்களுக்குரிய சரியான சொல்லைத் தெரிவு செய்க.*

மண்ணைக் ✡........... கண்டனன்;
மக்கள் தாகம் தீர்த்திடும்
தண்ணீர் வைக்கும் பானையாய்
✚.................. நொடியில் மாற்றினான்

26. ✡ என்ற குறியீடு உள்ள இடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

(1) உழவன் (2) சிற்பி (3) குயவன்

27. ✚ என்ற குறியீடு உள்ள இடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

(1) வயலை (2) மண்ணை (3) கல்லை

★ *பின்வரும் கோவையைப் பார்க்க*

$30 \nabla 6 = 40 \oplus 4$ = குறியீடானது சமனைக் கருதுகின்றது. நியமக் கணிதச் செய்கைகளுக்காக $\nabla$, $\oplus$ என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.
இதற்கேற்ப,

28. $\nabla$ என்ற குறியீடானது எதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது?

(1) பெருக்கல் (2) கூட்டல் (3) கழித்தல்

29. $\oplus$, என்ற குறியீடானது எதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது?

(1) வகுத்தல் (2) கழித்தல் (3) பெருக்கல்

30. இப்போது எனக்கு வயது 15 ஆண்டுகள் ஆகும். எனது தம்பியின் வயது 6 ஆண்டுகள் ஆகும். இன்னும் எத்தனை வருடங்களில் எனது வயது தம்பியின் வயதைப் போல் இரு மடங்காக இருக்கும்?

(1) 4 வருடங்கள் (2) 3 வருடங்கள் (3) 2 வருடங்கள்




★ *31 ஆம், 32 ஆம் வினாக்களுக்குரிய விடையைப் பின்வரும் கூட்டில் தரப்பட்டுள்ள எண்கள், எழுத்துக்கள், குறியீடுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தித் தெரிவு செய்க.*

இ , 5 , ✡ , 6 , ▽ , 3
7 , ம , ச , ✚ , த
ல , ✡ , 9 , ✡ , 5 , இ
3 , ந , ச , △

31. இக்கூட்டில் அதிக எண்ணிக்கையில் காணப்படுபவை யாவை?

(1) குறியீடுகள் (2) எண்கள் (3) எழுத்துக்கள்

32. இக்கூட்டில் அதிக எண்ணிக்கையில் காணப்படுவது யாது?

(1) இ (2) ✡ (3) 5

33. குங்குமம் என்னும் சொல்லைக் குறிக்கும் குறியீட்டு வடிவினைத் தெரிவு செய்க.

(1) ✡ ○ □ △ ⊠ (2) ⊠ ○ ✡ △ ✡
(3) ✡ □ ✡ △ ⊠

34. ▽ ✚ ○ ✡ என்னும் குறியீடு குறிக்கும் சொல் எது?


(1) வடிவம் (2) கம்பம் (3) சங்கம்

35. பின்வரும் கோட்டுப்படத்தில் உள்ள கோலத்திற்கு ஏற்ப வெற்று அடைப்புக்குப் பொருத்தமான எண்ணைத் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்க.

6999 → 6669 , 6699 → 6699 , 6669 → - - -

(1) 9666 (2) 6999 (3) 6669

★ *கீழே காணப்படும் உருவை அவதானித்து 36 முதல் 38 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.*




36. சதுரத்திற்கு மட்டும் உரிய இலக்கம் எது? ..................................

37. வட்டத்திற்கும் முக்கோணிக்கும் மட்டுமே உரிய இலக்கம் எது? ....................

38. வட்டம், சதுரம், முக்கோணி ஆகிய மூன்றிற்கும் பொதுவான இலக்கம் எது?
..................................

★ *39 ஆம், 40 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள எழுத்து நிரைகள் ஒவ்வொன்றிலும் ஒரு நல்ல இயல்பைக் காட்டும் ஒரு கூற்று மறைந்துள்ளது. இக்கூற்றின் எழுத்துக்களிடையே சேர்க்கப்பட்டுள்ள பொருத்தமற்ற எழுத்துக்களை நீக்கும்போது கிடைக்கும் கருத்துள்ள கூற்றைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.*

39. இ ன் க சொ ப ல் பே ங் சு வோ வ ம்
..................................................................


40. மு ங் தி ல யோ ங் க ரு க் வ கு ச உ ம் த ந் வு ன வோ சி ம்
..................................................................

**விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் ஆதிகா

**ஆதி மனிதக் குடியிருப்புகள் பற்றிக் குறிப்பிடும்பொழுது இலங்கையைப் பற்றியும் நாம் கவனத்தில் கொள்ளலாம். காரணம், ஆதி மனிதக் குடியிருப்புகள் தொடர்பிலான முக்கிய வரலாற்று சான்றுகள் இங்கிருந்தும் கிடைக்கப்பெற்றமையாகும். ஆதி மனிதனுடையது எனக் கருதப்படும் எச்சங்கள், எலும்புப் பகுதிகள் மற்றும் இதர சான்றுகள் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கிடைத்துள்ளன.**



நவீன கால மனிதன் என்று கருதப்படும் ஹோமோ சேப்பியன்களின் வரலாறு 1,50,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கருதப்படுகின்றது (சில வரலாற்று அறிஞர்கள் இந்த ஆண்டுப் பகுதியினை 2,60,000 க்கு முற்பட்டது என்றும் கருதுகின்றனர்). இவர்களின் தோற்றம் ஆபிரிக்காவில் நிகழ்ந்தது என்றும் இவ்வாறு தோன்றிய ஆதிக்குடிகள் ஆபிரிக்காவிலிருந்து ஆசியாவுக்கும் அங்கிருந்து அவுஸ்திரேலியாவுக்கும் மேற்குப் பகுதியில் ஐரோப்பாவுக்கும் வடக்கு அமெரிக்காவுக்கும் இடம்பெயர்ந்தனர் என்றும் நம்பப்படுகின்றது.

தெற்காசியாவின் தீவு என்ற வகையில் இந்தியாவுடன் பௌதீக தொடர்புகளையும் பிரிவுகளையும் இலங்கை ஏற்படுத்திக் கொண்டது. இவ்வாறு ஏற்பட்ட தரைப்பகுதி தொடர்புகளினால் தென் இந்தியாவிலிருந்து இலங்கைக்கும், இலங்கையிலிருந்து தென் இந்தியாவுக்கும் விலங்குகள், தாவரங்கள் மட்டுமன்றி மனிதர்களும் இடம்பெயர்ந்தனர். இது தொடர்பிலான மரபணு சான்றுகளும் படிமங்களும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

## பண்டைய கால குடியிருப்புகள்

அகழ்வாராய்ச்சி நிபுணரான கலாநிதி சிரான் உபேந்திர தெரணியகல, இலங்கையில் உள்ள கற்குகைகள் மற்றும் திறந்தவெளிக் குடியிருப்புகளில் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சிகளை அடுத்து மிக முக்கியமான தகவல்களையும் சான்றுகளையும் பெற்றுள்ளார். இவை ஆசிய பிராந்தியத்திற்கு மிகவும் முக்கியமானதாகும்.

## முதல் மனிதக் குடியிருப்புகள்

தென்பகுதி கரையோரப் பகுதியிலேயே இலங்கையின் முதலாவது மனிதக் குடியிருப்புகள் தொடர்பான சான்றுகள் கிடைக்கப்பெற்றன. 'புந்தல' தேசிய வனப்பூங்காவில் உள்ள பதிராஜவல எனும் பகுதியினை இதற்கு உதாரணமாகக் கூறமுடியும். புந்தல பதிராஜவலவில் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சிகளில் இன்றிலிருந்து 1,25,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதக் குடியிருப்புகள் தொடர்பிலான விடயங்கள் அறியக்கிடைத்துள்ளன. சில வேளைகளில் இக்காலப்பகுதி 2,50,000 க்கும் அல்லது அதற்கு முற்பட்டதாக இருக்கும் என்றும் கருதப்படுகின்றது.

## கற்களினாலான ஆயுதங்கள்

புந்தல பதிராஜவலவில் 1,50,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பண்டைய குடியிருப்புகளில் கற்களினால் செய்யப்பட்ட ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவ்வாறே, பண்டைய மக்களின் எலும்புத்துண்டுகள் ஆகக் குறைந்தது ஆயிரம் அளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பருவநிலை மாறுதல்களினால் இவை சிதைந்து போயுள்ளன. எனவே, இந்த மூதாதையர் பற்றியும் அவர்களின் நடத்தைகள் பற்றியும் அவர்களினால் உருவாக்கப்பட்ட கற்களினாலான ஆயுதங்களைப் பயன்படுத்தியே கணிப்பிட முடிந்துள்ளது.

## மத்திய பண்டைய கற்காலப்பகுதி

1,50,000 ஆண்டுகளுக்கு முன்பு புந்தல பதிராஜவலவில் வாழ்ந்த மானிடர்கள் மத்திய பண்டைய கற்காலப் பகுதிக்கு உரியவர்களாவர். இந்தக் காலப்பகுதிக்குரிய உபகரணங்கள் கடினமான திருவானாக்கல் மற்றும் கருங்கல் என்பனவற்றால் ஆனவை. இக்காலப்பகுதியில் இலங்கைக்கு முதன்முதலில் வந்த பழங்குடியினர் கரையோரப் பகுதிகளிலேயே தமது வசிப்பிடங்களை முதலில் அமைத்துக்கொண்டுள்ளனர். அங்கு கிடைத்தவற்றை உட்கொண்டு, வேட்டையாடி அவர்கள் வாழ்ந்து வந்துள்ளனர் என்றும் கருதப்படுகின்றது.



## மெசோலிதிக் காலப்பகுதி

ஈர வலயங்களில் உள்ள கற்குகைகள், உலர் வலயங்களில் உள்ள திறந்தவெளிக் குடியிருப்புக்கள், குகைகள் ஆகியவற்றில் இருந்தே ஆதி மனிதக் குடியிருப்புகள் குறித்த முக்கியமான தகவல்கள் தெரியவந்துள்ளன. மத்திய கற்காலப்பகுதியில் புந்தல பகுதியில் வசித்து வந்த மனிதர்கள் கடினமான கற்களினாலான ஆயுதங்களைப் பயன்படுத்தியுள்ளனர். அதன் பின்னர், மென்மையான கருவிகளைப் பயன்படுத்தத் தொடங்கிய மெசோலிதிக் காலப்பகுதி மனிதர்கள் தொடர்பிலான தகவல்கள் மேற்கூறப்பட்ட குகைகள், திறந்வெளிக்குடியிருப்புகள் என்பனவற்றில் காணக்கிடைத்துள்ளன.

குறிப்பாக, குருவிட்ட-பட்டதொம்ப குகை, கேகாலையில் அகுகுகை, கித்துல்கல பெலிகுகை, புளத்சிங்கள பாஹியன் குகை, கேகாலை தொரவக்க குகை, சீகிரியாவில் பொத்தான கற்குகை உட்பட பல குகைப்பகுதிகளிலும் உடவளவை தேசிய பூங்காவில் உள்ள திறந்த வெளிப்பகுதியிலும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளில் இவை உறுதிசெய்யப்பட்டன.

## கற்களினாலான ஆயுத பாவனை

உலகில் கற்களினாலான ஆயுத பாவனைகளில் மிகவும் உயர்ந்த மட்ட தொழில்நுட்பத்தினை வெளிப்படுத்துவது மத்திய கற்காலப் பகுதியாகும். மிகச் சிறியதாக உருவாக்கப்பட்ட கற்கால ஆயுதங்களே இங்கு மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. இவற்றை உருவாக்குவதற்கு திருவானாக்கல் உட்பட மற்றுமொரு கல்



குருவிட்ட பட்டதொம்ப குகை


வகை… யின்… ஆயு… படுகி… இ… தட்… ளன. … கப் ப… விலா… டுள்… துள்… இறை… கான… லாம்.

ப…

இ… ஆதி…

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...லக் குடியிருப்புகள்



ஆதிக்குடிகள்' என்று அழைக்கப்படுகின்றனர். 'பலாங்கொடை ஆதிக்குடிகள்' என்று அவர்கள் அழைக்கப்படக் காரணம், கடந்த நூற்றாண்டின் மத்திய காலப்பகுதியில் பலாங்கொடை பெல்லன் பெந்திபெலஸ்ஸ பகுதியில் அந்த ஆதிக்குடிகளின் படிமங்கள் முதன்முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டமையாகும்.

பலாங்கொடை ஆதிக்குடிகள் வேட்டையாடும் சுற்றுலா விரும்பிகளாக இருந்துள்ளனர். அவர்கள் சிறிய விலங்கினங்கள் முதற்கொண்டு பெரிய விலங்குகள் வரை வேட்டையாடியிருக்கின்றனர். அவர்கள் முள்ளம் பன்றி, காட்டெருதுகள், மான்கள், காட்டுப் பன்றிகள், மர நத்தைகள் என்பனவற்றை உட்கொள்ளும் வழக்கத்தினைக் கொண்டிருந்தனர். இவற்றைத் தவிர, அவர்கள் மலைப்பாம்புகள், ஆமைகள் மற்றும் ஆற்று மீன்கள் என்பனவற்றையும் உட்கொண்டுள்ளனர். இவர்கள் கற்குகைகளில் கூட்டமாகவே வசித்தனர் என்பதற்கான அகழ்வாராய்ச்சி சான்றுகளும் கிடைத்துள்ளன. மட்பாண்டங்களை இவர்கள் பயன்படுத்தாவிடினும் நெருப்பினால் சுட்டு இவர்கள் உணவுகளை உட்கொண்டுள்ளனர்.

வகையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் கற்கால ஆயுத வரலாற்றில் இந்தக் கல் ஆயுதங்கள் தனித்துவம் மிக்கவையாகக் கருதப்படுகின்றன.

இவற்றைத் தவிர, பல துளைகள் இடப்பட்ட தட்டையான கற்கள் பலவும் இங்கு கிடைத்துள்ளன. இவை ஒருசில தாவர விதைகளை உடைக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதேபோன்று விலங்குகளின் எலும்புகளில் தயாரிக்கப்பட்டுள்ள கூரான ஆயுதங்களும் அதிகளவு கிடைத்துள்ளன. அவை நத்தை ஓட்டுக்குள் உள்ள இறைச்சியை வெளியே எடுக்கவும் வில்லுக்கான அம்புகளாகவும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

## பலாங்கொடை மனிதர்கள்


இலங்கையில் மத்திய கற்காலத்தில் வாழ்ந்த ஆதிக்குடிகள் பொதுவாக 'பலாங்கொடை

இதுதவிர, பலாங்கொடை ஆதிக்குடிகள் பற்றிய தகவல்கள் 'குரவிட்ட பட்டதொம்ப' குகையிலும் 'புளத்சிங்கள பாஹியன்' குகையிலும் காணக்கிடைக்கின்றன. மேற்படி, அகழ்வாராய்ச்சிகளில் இருந்து இந்த ஆதிக்குடிகள் இற்றைக்கு 40,000 ஆண்டுகளுக்கு முன்பு இந்த குகைகளில் வசித்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது. மேலும், அநுராதபுரம், கண்டி போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின்போது அநுராதபுரத்திற்கு வருகை தந்த முதல் ஆதிக்குடிகள் இந்த பலாங்கொடை ஆதிக்குடிகள் என்று தெரிய வந்துள்ளது. இவர்களின் இறுதிக்காலம் பற்றிய விபரங்கள் மன்னாரில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

பலாங்கொடை ஆதிக்குடிகள் ஒருபோதும் விவசாயத்தில் ஈடுபாடு கொண்டிருக்கவில்லை என்று கருதப்படுகின்றது. வேட்டையாடும் பழக்கம் இருந்ததால் பல்வேறு இடங்களை நோக்கிச் செல்வது அவர்களின் வழக்கமாக இருந்திருக்கின்றது. அதன்படி, இவர்களின் மரண விதிகள், வழிபாடுகள் மற்றும் கலைப் படைப்புகள் என்பன இலங்கையின் பல்வேறு பாகங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராச்சிகளிலிருந்து தெரியவந்துள்ளது. 'ஹோட்டன்' சமவெளியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் ஊடாக பலாங்கொடை ஆதிக்குடிகள் வாழ்ந்த 25 திறந்தவெளிக் குடியிருப்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## உடல் அமைப்புகள்

இவர்களின் உயரம் 5 அடி 5 அங்குலத்தினை விடவும் சற்று அதிகமாகும். நெற்றிப் பரப்பு தெளிவாக இருக்கும். ஆண்களின் தலைப்பகுதியின் சுற்றளவு 1589.72 சென்ரிமீற்றர். இதுவே பெண்களின் அளவு 919.66 சென்ரிமீற்றராகும். தலைப்பகுதியின் எலும்புப் பகுதி கனமானது. பரப்பு அதிகமானது. தட்டையான விரிந்த மூக்கு உண்டு. பற்களின் அளவும் அதிகம். உடல் பருமனானது. மட்பாண்டங்கள் பயன்படுத்தப்படாததனால் சுடப்படும் இறைச்சியுடன் மண் அதிகளவில் ஒட்டியிருக்கும். அதனால், அவர்களின் பற்கள் பெரும்பாலும் சேதமடைந்திருக்கும். இன்றிருக்கும் மனிதர்களுடன் ஒப்பிடும்போது அவர்கள் அதிக




எண்ணிக்கையிலான பற்களைக் கொண்டுள்ளனர் என்று தெரியவந்துள்ளது. இவர்களின் உடலில் அடர்த்தியான ரோமங்கள் இருந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

## புரோட்டோ வரலாற்று காலகட்டம்


கி.மு 1350 களில் ஆரம்பமான புரோட்டோ காலப்பகுதியின்போது பலாங்கொடை ஆதிக்குடிகள் அழிந்துபோயிருந்தனர். அநுராதபுரம் உள்ளிட்ட கண்டி மற்றும் எம்பிலிபிட்டிய ரஞ்சமடு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளினை அடுத்து இந்த காலகட்டம் கி.மு 1350 தொடக்கம் கி.பி 500 வரை பரந்து விரிகின்றது என அறியப்பட்டது.

## புரோட்டோ வரலாற்று காலகட்ட ஆதிக்குடிகள்


மட்பாண்டம், இரும்பு என்பனவற்றை இவர்கள் பயன்படுத்தியுள்ளனர். குதிரை, மாடு வளர்ப்பு மற்றும் விவசாயம் போன்ற ஜீவனோபாய தொழில்களைச் செய்த ஆதிக்குடிகளாகவே இவர்கள் இனங்காணப்படுகின்றனர்.







துளையிடப்பட்ட கற்கள்



எலும்புகளினால் செய்யப்பட்ட ஆயுதங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மழை தந்த வாழ்வு

நீலவானம் இருண்டது
 நெடிய மேகம் திரண்டது
மேளம் போல இடித்தது
 மின்னல் வானில் வெடித்தது.

சீறிக் காற்றும் எழுந்தது
 சேர்ந்து மழையும் பொழிந்தது.
பாரிய மரமும் வீழ்ந்தது
 பாய்ந்து வெள்ளம் வடிந்தது.

ஆறாய் நீரும் பாய்ந்தது
 அருவியாய் பரந்தது
சேறாய் வயலும் நிறைந்தது
 செந்நெல் பூத்துச் சிரித்தது.

செடிகள் நன்கு தழைத்தன
 வளமும் வாழ்வும் செழித்தன
இருண்ட வாழ்வு அகன்றது
 எல்லோர் மனமும் குளிர்ந்தது.

நி.அக்மா,
கமு/அல்-ஹம்றா வித்., மருதமுனை.

# இளவரசியும் மூன்று இளவரசர்களும்



முன்னொரு காலத்தில் மைதிலி என்ற இளவரசி வாழ்ந்து வந்தாள். அவள் பேரழகுடையவள். அவள் திருமண வயதை அடைந்தபோது அவளை மணக்க வந்த பல இளவரசர்களில் மூன்று சிறந்த இளவரசர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அவர்களில் முதல் இளவரசன் நளின். அவன் மிக அழகானவனாகவும் சிறந்த சோதிடனாகவும் காணப்பட்டான். நடக்க இருப்பதையும் நடப்பதையும் கூறும் வல்லமை பெற்றிருந்தான்.

இரண்டாவது இளவரசனின் பெயர் விசால். அவன் மிகுந்த புத்திக் கூர்மையுடையவன். அவனிடம் ஒரு பறக்கும் தட்டு இருந்தது. அதன்மூலம் எவ்விடத்திற்கும் பறந்து செல்லலாம்.

மூன்றாவது இளவரசன் அரவிந்த். இவன் நேர்மையுடையவன். சிறந்த வாள்பயிற்சி பெற்றவன். இம்மூவரில் யாரைத் தன் மகளுக்குத் திருமணம் முடித்துக் கொடுப்பதென்று அரசனுக்கு மிகவும் குழப்பமாக இருந்தது.

அன்றிரவு அந்த இளவரசர்கள் மூவரும் அரண்மனையிலேயே தங்கினர். மறுநாள் காலை எதிர்பாராத விதமாக இளவரசியைக் காணவில்லை. எங்கு தேடியும் அவள் கிடைக்கவில்லை. இதனால், வேதனை அடைந்த அரசன் மூவரிடமும் மைதிலியை கண்டுபிடித்து வருமாறு கூறினான். இளவரசன் நளின் தன் சோதிடத் திறமையை உபயோகித்து "இளவரசி நடுக்கடலில் இருக்கும் ஒரு குன்றில் அரக்கி ஒருத்தியிடம் சிறைப்பட்டிருக்கிறாள்" என்றான். உடனே மூவரும் விசாலிடம் இருந்த பறக்கும் தட்டில் அமர்ந்து அக்குன்றை அடைந்தனர்.




இதையறிந்த அரக்கி தம்மை நோக்கி வரும் மூவரையும் பார்த்து கத்தியவண்ணம் பறந்து வந்தாள். இதை அவதானித்த மூவரும் திகைத்து விட்டனர். உடனே அரவிந்த் தன் வாளால் அரக்கியை வெட்டி வீழ்த்தி இளவரசியுடன் மீண்டான். மைதிலியைக் கண்டு மகிழ்ந்த அரசன், "மகளே உனக்கு இந்த மூன்று இளவரசர்களில் பொருத்தமானவர் யார்?" எனக் கேட்டான்.

அதற்கு அவள், "எனக்கு அரவிந் மிகப் பொருத்தமானவர். ஏனெனில், அவர் தன் வீரத்தால் அரக்கியை கொன்றார். இல்லையேல் அரக்கி அனைவரையும் கொன்றிருப்பாள்" என்றாள். அதன்பின் இளவரசி மைதிலிக்கும் இளவரசன் அரவிந்துக்கும் சிறப்பாகத் திருமணம் நடந்தது.

மு.ஜ.மு.றொஸான்,
தி/மூதூர் ம.கல்., மூதூர்-05.

# நற்சிந்தனை

அதிசிறந்த நாள் - இன்று
மிகப் பெரிய பலவீனம் - பயம்
மிகக் கீழ்மை உணர்வு - பொறாமை
குழப்பத்தை விளைவிப்பது - மேலதிக பேச்சு
சிறந்த மனிதன் - சரியென உணர்ந்து கொள்பவன்
மிக இலகுவானது - குற்றம் காணல்
அத்தியாவசியத் தேவை - கலங்காத அறிவு
வெற்றியின் ரகசியம் - விடாமுயற்சி


அ.பிரவீணன்,
தி/குளக்கோட்டன் த.வித்.,
தம்பலகாமம், திருகோணமலை.

# ஐரோப்பாவைப் பற்றி...

* ஐரோப்பாவின் மிக முக்கியமான நாடாகத் திகழ்வது - இங்கிலாந்து.
* ஐரோப்பாவில் இருக்கும் கிறீஸ் நாட்டில்தான் உலகப் புகழ்பெற்ற ஒலிம்பிக் போட்டி தோன்றியது.
* ஐரோப்பாவில் மக்கள் நெருக்கடி மிகுந்த நாடு-பெல்ஜியம்.
* ஐரோப்பாவின் மிகப்பெரிய நதி 'வோல்கா'.
* ஐரோப்பாவில் உள்ள அனைத்து நாடுகளிலும் பாலைவனம் கிடையாது.

தொகுப்பு:
எம்.எம்.முஹம்மட் அஷ்பக்,
மட்/மெதடிஸ்த ம.கல்.,
மட்டக்களப்பு.

# ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகம்



இங்கிலாந்தின் ஒக்ஸ்ஃபோர்ட் நகரில் அமைந்துள்ள ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகம் உலகில் ஆங்கில மொழி ஊடாக கல்வி வழங்கும் உயர் கல்வி நிறுவனங்களில் மிகப் பழைமையானதாகும். 12 ஆம் நூற்றாண்டில் இப்பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டது.

அக்காலத்தில் பல கொடை வள்ளல்கள் ஒக்ஸ்ஃபோர்ட் வாழ் சமூகத்துக்கு உதவும் நோக்குடன் கல்லூரிகளை நிறுவலாயினர். ஸ்கொட்லாந்தின் மன்னனான John Balliol என்பவரின் பெற்றோர் அவரது பெயரில் Balliol College என்ற கல்லூரியை உருவாக்கினர்.

15 ஆம் நூற்றாண்டின் பின்னர் ஐரோப்பிய மறுமலர்ச்சியின் செல்வாக்கு ஒக்ஸ்ஃபோட்டிலும் பிரதிபலிக்கத் தொடங்கியது. 17 ஆம் நூற்றாண்டில் Sir Thomas Bodley என்பவரின் உதவியுடன் Bodleian Library என்ற நூலகம் அங்கு உருவாக்கப்பட்டது. இன்றும் ஒக்ஸ்ஃபோர்டில் உள்ள மிகப்பெரிய நூலகமாக இது திகழ்கிறது.

19 ஆம் நூற்றாண்டில் ஒக்ஸ்ஃபோர்ட் அமைப்பிலும் நிர்வாகத்திலும் சீர்திருத்தம் ஏற்பட்டது. 20 ஆம் நூற்றாண்டில் ஒக்ஸ்ஃபோர்டானது நவீன உலகத் தேவைக்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கப்பட்டது. விஞ்ஞானக் கல்வியை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஆய்வுகூடங்கள் நிர்மாணிக்கப்பட்டன. 1878 ஆம் ஆண்டில் பெண்களுக்கான கல்லூரிகளும் அங்கு உருவாக்கப்பட்டன.

எஸ்.எஸ்.அன்சா,
கு/பறகஹதெனிய தே.பாடசாலை.

# ஓய்வு நேரத்தை பயனுள்ளதாக்குவோம்

நாம் ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாக மாற்றியமைக்கவேண்டும். மாணவர்களாகிய எமக்கு ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாக ஆக்கிக்கொள்ளப் பல வழிமுறைகள் உள்ளன. கதைகள் வாசித்தல், கவிதை எழுதுதல், முத்திரை சேகரித்தல், வீட்டுத்தோட்டம் செய்தல் போன்றன அவற்றில் சிலவாகும்.

கதைகளை வாசிப்பதன் மூலம் கற்பனைத்திறன் மேம்படுவதோடு, நாமும் கதைகளை எழுதிப் பழகுவதும் இலகுவாக இருக்கும். நாம் நல்ல நீதிப் போதனைகளைக் கூறும் கதைகளை அதிகமாக வாசிப்பது சிறந்தது.

அந்தவகையில், கவிதைகளை எழுதும்போது எமது உள்ளார்ந்த ஆற்றல் வெளிக்கொணரப்படும். அத்தோடு, கற்பனை சக்தியும் வலுப்பெறும். நாம் எழுதும் கவிதைகள் இலகுவாகப் புரிந்து கொள்ளக் கூடிய வகையில், எளிமையான மொழிநடையில் அமைந்திருத்தல் வேண்டும்.மற்றும், வீட்டுத்தோட்டப் பராமரிப்பில் ஈடுபடுவதன் [illegible]



மகிழ்ச்சியும் கிடைக்கும். இதன்மூலம் வீட்டுத் தேவைகளுக்கான காய்கறி வகைகளையும் இலகுவில் பெற்றுக்கொள்ளலாம்.

"சோம்பல் மிகக் கெடுதி பாப்பா" எனும் பாரதியாரின் வாக்கை உணர்ந்து ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாக மாற்றியமைப்போமாக!

என்.எப்.அய்மா,
கமு/அல்-ஹம்றா வித்.,மருதமுனை.

# தெரிந்து கொள்வோம்

★ எலிகளின் இதயத் துடிப்பு நிமிடத்திற்கு 700 முறை. இவை நிமிடத்திற்கு 130 முறை சுவாசிக்கின்றன.
★ பைபிளின் வெட்டுக்கிளி என்று அழைக்கப்படும் நாடு எகிப்து.
★ இதுவரை 3 லட்சம் வண்டினங்கள் கண்டறியப்பட்டுள்ளன.
★ பூமியில் 35 கோடி ஆண்டுகளாக வாழ்ந்து வரும் பூச்சியினம் கரப்பான் பூச்சியாகும்.
★ நிலவின் படத்தை முதலில் வரைந்தவர் வில்லியம் கில் பேர்ட்.
★ தீப்பெட்டியைக் கண்டுபிடித்தவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஜான் வாக்கர்.
★ மெழுகுவர்த்தி தொடர்ந்து எரிவதற்கு அதிலுள்ள 'ஹைட்ரோ கார்பன்' துகள்கள் உதவுகின்றன.

தொகுப்பு: ஆர்.எம்.ரிசாட்,
மதீனா தே.பாட., மடவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அங்.இல: 3219
கு.தர்ஷன், தரம் - 7B, கதிரேசன் ம.கல்., நாவலப்பிட்டி.


அங்.இல: 3220
சு.சுலக்ஷன், தரம் - 7A, மகாஜனாக் கல்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3221
எம்.எஸ்.ஸெய்னப், தரம் - 5, அல்-அகீல் மு.ம.வித்., கொட்டியாகும்புரை.


அங்.இல: 3222
சி.இவாஞ்ஜெனி, தரம் - 7B, விபுலானந்தா கல்., திருகோணமலை.


அங்.இல: 3223
சதீஸ்குமார், உயர் தரம், நானாட்டன் ம.வித்., மன்னார்.


அங்.இல: 3224
வ.அபிலாஷினி, தரம் - 9, பாக்கியம் தே.கல்., மாத்தளை.


அங்.இல: 3225
எ.எஸ்.சர்ஜானா, தரம் - 5A, பொலன்னறுவை மு.ம.கல்., பொலன்னறுவை.


அங்.இல: 3226
ந.முஹம்மட் றிஸான், தரம் - 5, அர்-ரஹீமியா வித்., அக்கரைப்பற்று-06.

# விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 3227
ஹீஸ்னி ஸஹ்ரத்கான், தரம் - 7B, மின்ஹாத் தே.பா., மாத்தளை.


அங்.இல: 3228
ஆ.அன்ரனிஸ் லெம்பேட், உயர் தரம், தோப்பு றோ.க.த.வித்., தங்கொட்டுவ.


அங்.இல: 3229
க.தனுஷிகா, தரம் - 6A, வட்டவளை த.ம.வித்., வட்டவளை.


அங்.இல: 3230
சி.கஜன்சிகா, தரம் - 6, வேம்படி ம.கல்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3231
ஏ.டேனியல், தரம் - 9D, சென் மேரிஸ் ம.கல்., நோர்வூட்.


அங்.இல: 3232
ஜெ.அப்துர் ரஹ்மான், தரம் - 9, டி.டி.ஏ கல்., மாவனல்லை.


அங்.இல: 3233
ஏ.ஆர்.இக்ராம், தரம் - 10, தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபியா கலாபீடம், கந்தளாய்.


அங்.இல: 3234
ஏ.மதிவதனி, உயர் தரம், கம்பளை இ.கல்., கம்பளை.


அங்.இல: 3235
எம்.ஐ.மிஸ்ரான், தரம் - 9A, மதவாக்குளம் மு.ம.வித்., புத்தளம்.


அங்.இல: 3236
ர.நிரோஜன், தரம் - 8A, விக்ரோறியா கல்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3237
கோ.போசகாந், தரம் - 9J, வ/த.ம.ம.வித்., வவுனியா.


அங்.இல: 3238
யோ.கஜேந்திரன், தரம் - 10B, கொ/இந்துக் கல்., இரத்மலானை.

# விற்றமின்களின் அவசியம்

நாம் அனைவரும் சிறந்த உடல் நலத்தோடும் ஆரோக்கியமாகவும் வாழவே ஆசைப்படுகின்றோம். நம்மில் பலர் உணவுக் கட்டுப்பாடு என்ற நோக்கில் ஆரோக்கியமான உணவுகளைக்கூட தவிர்க்கிறோம். அவ்வாறு செய்வதனால் உடல் நலக் கேடு ஏற்படுவதோடு, அவ் உணவுகளில் உள்ள அதிகளவிலான விற்றமின்களையும் சேர்த்தே இழக்க நேரிடுகின்றது.



மருந்துவர்களின் ஆலோசனைப் படி, ஆரோக்கியமான உடல் நலத்திற்கு 13 வகையான விற்றமின்கள் அவசியமாகின்றன. நம் அன்றாட உணவுகளிலேயே இவ்வாறான விற்றமின்கள் அடங்கியுள்ளன. அதாவது, மஞ்சள் வண்ணப் பழங்களில் விற்றமின் A, C அடங்கியுள்ளது. அந்தவகையில், மழைநீரில் விற்றமின் B12 உள்ளது. கோதுமை, மீன் ஆகியவற்றில் விற்றமின் K அடங்கியுள்ளது. இவ்விற்றமின்கள் குறைந்தால் குருதி உறைவதில் பிரச்சினைகள் ஏற்படுவதோடு, விற்றமின் B1 குறைபாட்டால் மூளை வளர்ச்சி குன்றுகிறது எனவும் கூறப்படுகின்றது.

# வாராந்தம் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான 'வீரோதார' பரிசுகள்




இது, வாராந்தம் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான 'வீரோதார' உற்பத்தி கல்வி உபகரணங்களை பரிசுகளாக அள்ளித்தரும் 'வீரோதார-விஜய்' குறுக்கெழுத்துப்போட்டி. இவ்வார 'விஜய்'யை வாசிக்கும்போதே இந்த போட்டிக்கான அநேக விடைகளை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கான பரிசுகளின் விபரம் வருமாறு;

★ முதலாம் பரிசு
ரூபா 3,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ இரண்டாம் பரிசு
ரூபா 2,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ மூன்றாம் பரிசு
ரூபா 1,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ 10 ஆறுதல் பரிசுகள்
ஒவ்வொருவருக்கும் ரூபா 500 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்.

விடைகளை நிரப்பி-கத்தரித்து-தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி 23.12.2009 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி;

**வீரோதார-விஜய்**
**குறுக்கெழுத்துப் போட்டி இல: 23**
**'விஜய்',**
**த.பெ.இல: 2037, கொழும்பு.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 தி | மி | ங் | 2 க | ல | ம் |
| ற | ■ | ■ | ட் | ■ | ■ |
| மை | ■ | 3 பா | ட | ம் | ■ |
| ■ | ■ | ■ | ளை | ■ | 4 க |
| 5 ச | ந் | 6 தை | ■ | ■ | ரு |
| னி | ■ | பா | ■ | 7 தி | வீ |

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 21 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்

**முதலாம் பரிசு**
ஏ.பி.எம்.அஸாம், கல்முனைக்குடி-B, ஆலங்குடா, ஏத்தாலை, புத்தளம்.

**இரண்டாம் பரிசு**
அ.ஆன்டொறிற்ரா, 12/2, விதானையார் வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

**மூன்றாம் பரிசு**
கே.டிலக்ஷனா, 133 1/2 ஸ்ரீ சுமனதிஸ்ஸ மாவத்தை,கொழும்பு-12.

**ஆறுதல் பரிசுகள்**

பு.நிதாரனி, 21 2/6 சாமிலேன்ட், தலப்பியன்னாவ, அம்பிட்டிய.

எம்.என்.எம்.நஜாத், 450, அருக்வத்தை, பாதுக்கை.

அ.நிகிலா, மாரியம்மன் கோவில் வீதி, களுவாஞ்சிக்குடி-09.

எஸ்.சர்மிளா, தீகல்ல டிவிஷன், மத்துகம.

த.பிரசாளினி, கரைச்சந்திடல், தம்பலகாமம்.

ஏ.எம்.அப்லல், 349, கல்யாண வீதி, சாய்ந்தமருது-07.

டி.துலோஞ்சனி, கலபொட எஸ்டேட், கல்லல்ல, இரத்தினபுரி.

ஐ.நுஸ்கி முஹமட், 10/11 அபேசிங்கபுர, பெரியமுல்ல, நீர்கொழும்பு.

இ.சௌமினி, 12/1 விதானையார் வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

ஏ.அஸியா அஷ்ரப், பாடசாலை ரோட், எதுன்கஹகொட்டுவ.





| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | த் | | | ■ | 2 |
| | ■ | ■ | ■ | 3 | |
| பு | ■ | ■ | 4 | | |
| ■ | 5 கீ | ■ | | ■ | ம் |
| 6 | | | | ■ | ■ |
| | ■ | ■ | 7 | ம | |

பெயர் : ..............................
வீட்டு முகவரி : ..............................
..............................
தொலைபேசி இல : ..............................
பாடசாலை : ..............................
அருகிலுள்ள நகரம் : ..............................
மாவட்டம் : ..............................

**மேலிருந்து கீழ்**
1. சிநேகிதம் ஒத்த கருத்துச்சொல்.
2. துணிச்சல் என்றும் சொல்லலாம்.
3. அழுத பிள்ளை இது குடிக்கும் என்பர்.
4. மருத்துவக் குணம்மிக்க ஒரு கீரை.
5. பாம்புக்கு இது பகையாம்.
6. நுளம்பு என்றும் சொல்லலாம்.

**இடமிருந்து வலம்**
1. அடுத்தவாரம் வரவிருக்கும் பண்டிகை.
3. முல்லைக்கொடிக்கு தேர் ஈந்த வள்ளல்.
4.. நெற்செய்கை மேற்கொள்ளப்படும் இடம். (குழம்பியுள்ளது)
6. மனிதரைப் போல் தோற்றமுள்ள விலங்கு.
7. சேற்றில் மலரும் மலர். (திரும்பியுள்ளது)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## எப்படியும் வளரும்

தாவரங்கள் பொதுவாக மண் மற்றும் நீர் ஆகியவற்றின் ஆதாரத்தில் வளரக்கூடியவை. இவை இரண்டில் ஏதாவது ஒன்று குறைவாகக் கிடைத்தாலும் தாவரங்களின் வளர்ச்சியில் பின்னடைவைக் காணலாம். ஆனால், ஒரு தாவரத்தின் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து வளங்களும் குறைவாகக் கிடைத்தாலும், எந்தவொரு பின்னடைவையும் காட்டாமல் நல்ல ஆரோக்கியமான வளர்ச்சியை எட்டக்கூடிய தாவரம்தான் மூங்கில். தாவரங்களிலேயே மிக வேகமாக வளரக்கூடியதும் இதுவேயாகும்.

# மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

### கிறிஸ்மஸ் வாழ்த்து மடல்





எஃப்.ஃபர்ஹானா, தரம் - $8^A$,
பாத்திமா பாலிகா மு.வித்.,கண்டி.




எம்.ஏ.எம்.ஸைத், தரம் - $6^E$,
அஸ்ஹர் ம.கல்., அக்குறனை.

### துடுப்பு மட்டையும் பந்தும்



ஆர்.நிரோஜன், தரம் - $3^B$,
நோர்வூட் த.ம.வித்., நோர்வூட்.



எஃப்.ரிஸ்மா, தரம் - $1^A$,
அல்-ஹிலால் மத்திய கல்லூரி.

### பரிசுப் பொதியுடன் நத்தார் தாத்தா



ர.தேவிகா, தரம் - $9^I$,
பாக்கியம் தே.கல்., மாத்தளை.



எஃப்.பிஸாஹிர், தரம் - $9^B$,
அல்-ஷஃபா ம.வித்., பொல்கொல்ல.



எஃப்.பஸ்மிலா, தரம் - 11,
கு/மடிகே மு.ம.வித்., முதுன்துவ.

### படகோட்டி



க.மதுசூதனன், தரம் - $9^C$,
யா/சாவகச்சேரி இ.கல்.,
சாவகச்சேரி.

### கிறிஸ்மஸ் மரம்



உ.கிஷோ ராஜ், தரம் - 5,
அசோகா த.வித்., கண்டி.



எம்.எல்.ஏ.ஆகிப் அணாம், தரம் - 2,
உடுகொட அறபா ம.வித்.,
உடுகொட.

### பரிசுப் பொருட்கள்



எல்.டிலாசினி, தரம் - $8^C$,
சென்.மேரிஸ் மத்திய கல்லூரி.



ஆ.முரளிதரன், தரம் - $7^A$,
லக்கம் த.வித்., மஸ்கெலியா.




அண்மையில் கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையில் 'உலகிற்கு உப்பாயிருங்கள்' என்ற தொனிப்பொருளின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வருடாந்த ஒளிவிழாவின் ஓர் அங்கமாக நடைபெற்ற பரிசளிப்பின்போது, மாணவா ஒருவர் பரிசு பெறுவதை படத்தில் காணலாம்.

(தகவல் : ப.லெமுவல்-கல்முனை)



சம்மாந்துறை அல்-மர்ஜான் பெண்கள் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற குருளைச் சாரணிய பாசறையில், வலயத்தின் சிறந்த குருளைச் சாரணிய குழுவை உருவாக்கி, 2009 ஆம் ஆண்டுக்கான குருளைச் சாரணிய வலயக் கல்விப் பணிப்பாளர் விருதினை சம்மாந்துறை அல்-அமிர் வித்தியாலய ஆசிரியையான ஏ.ஜி.கே.ஹைறியா, மூத்த சாரணியத் தலைவரான டி.தர்மலிங்கம் அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்வதையே படத்தில் காண்கின்றீர்கள்.




கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு




எம்.எச்.எஃப்.ஹனா,தரம் - $9^C$,
அல்-மின்ஹாஜ் தே.பாட.,
ஹபுகஸ்தலாவை.



எம்.யூ.எம்.ஸஹ்ரான்,
தரம் - $6^A$, அலிகார் ம.வித்.,
கல்-எளிய.



அ.சாஸினா ஃபர்வின்,தரம் - $7^A$,
அல்-அஸ்ஹர் மு.ம.வித்.,
திருகோணமலை.



கரீமா நௌஷாட்,
பாலர் வகுப்பு,
அஸீஸா பாலர் பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘நொபெல்’ பணப்பரிசு குறைவடையும் அறிகுறி

சாதனைகள் படைத்தவர் களுக்கென வழங்கப்படுகின்ற ‘நொபெல்’ பரிசிற்கு கொடுக் கப்படுகின்ற நிதித்தொகையின் பெறுமதி குறைவடையவுள்ள தாக செய்திகள் தெரிவிக்கின் றன.

உலக அளவில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் காரணமாகவே இந்நிலை ஏற்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

நொபெல் பரிசு அறிமுகமா கிய நாள் தொடக்கம் குறித்த பரிசுகளுக்கான நிதித்தொகை வங்கியில் முதலீடு செய்யப்பட்டு வந்தது. இந்த முதலீட்டுத் தொகைக்கு கிடைக் கின்ற வட்டி அடங்கலான பணம்தான் குறித்த விருது களுக்கான பணப்பரிசாக வழங்கப்பட்டு வந்தது. ஆனால், அண்மைக்காலமாக உலக பொருளா தார நெருக்கடியின் காரணமாக வங்கி களில்



முதலீடு செய்யப் பட்டுள்ள பணத் திற்கு குறைந்த வீத வட்டியே வழங்கப் பட்டு வருகின்றது. இதனால், நொபெல் பரிசு வழங்கும் குழுவிற்கு வருமானம் குறைந்துள்ளது. எனவே, இனிவரும் காலங்களில் வழங்கப்படவுள்ள நொபெல் பரிசுகளுக்கு குறைந்தளவு பணத்தையே பரிசாக வழங்க குழுவினர் தீர்மானித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.




அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# காலநிலை மாநாடு கோபன்ஹேகனில் ஆரம்பம்

COP15
COPENHAGEN
UN CLIMATE CHANGE CONFERENCE 2009

புவி வெப்பமடைதலின் காரணமாக ஏற்படக்கூடிய இயற்கை அனர்த்தங்களிலிருந்து மனிதனைக் காப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய எதிர்கால நடவ டிக்கைகள் குறித்து ஆராய் வதற்கான மாநாடு டென்மார்க் நாட்டின்



கோபன்ஹேகன் நகரில் கடந்த 7 ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 18 ஆம் திகதி வரை நடைபெறுகின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் ஏற்பாட்டில் நடைபெறுகின்ற இந்த மாநாட்டில் 192 நாடுகளின் தலைவர்கள் உட்பட 190 நாடு களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்கின்றனர்.

கரியமிலவாயு வெளியேற் றம் புவியில் பரவுவதனைத் தடுப்பதற்கு அனைத்து நாடுகளும் நிலக்கரி, எரிவாயு,எண்ணெய் ஆகியவற்றின் பாவனையை கட்டுப்படுத்திக் கொள்வது தொடர்பாக இந்த மாநாட்டில் ஓர் உடன்பாட்டிற்கு வருவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## அற்லஸ் கேள்வி - 234

**கேள்வி:** காலநிலை மாநாட்டில் எத்தனை நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது?

சரியான விடை.......................................

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 234,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

## போட்டி இல - 232 இன் சரியான விடை: சிங்கப்பூர்

**பரிசு பெறுவோர்**

தியாகராஜா நிதீபன்,
ஆஸ்பத்திரி வீதி, அச்சுவேலி,
யாழ்ப்பாணம்.

வி.ஷரண்யன்,
24B 3/1, எதிரிவீர எவெனியூ, தெஹிவளை.

எம்.ஹிதாஃப்,
54/38, ஸ்பில் வீதி, புத்தளம்.



# திருட்டைத் தடுக்க மின்சாரத் தாக்குதல்

**இந்தியாவின் ஹர்யானா மாநிலத்தில் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்களில் பஸ் நடத்துனரின் பணப்பையை கொள்ளையிடும் சம்பவங்கள் அதிகரித்து வருவதைத் தடுப்பதற்காக, அம்மாநிலத்தின் பொலிஸார் புதிய வழிமுறையொன்றைக் கையாளத் தொடங்கியுள்ளனர். அதாவது, பஸ் நடத்துனரின் அனுமதி இல்லாமல் பணப்பையை தொடுகின்றவர்களுக்கு மின்சாரம் தாக்கும் விதமாக 250 வோல்ட் மின்சாரத்தைப் பாய்ச்சும் உபகரணம் ஒன்றை குறித்த பணப்பையில் பொருத்துகின்றனராம். அத்து டன், அவைகளில் சமிக்ஞை ஒலியும் பொருத்தப்படுகின்றதாம்.**



# முதுகில் ‘ஜெட்’ என்ஜினை பொருத்திப் பறக்கவுள்ள நபர்

சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த 50 வயதுடைய யீச்சீஸ் ரொஸி என்பவர்தான் இந்த சாதனையை நிகழ்த்தத் தீர்மானித்துள்ளார்.

முதுகில் ‘ஜெட்’ விமானத்தின் என்ஜினைப் பொருத்திக்கொண்டு இரு பக்கத்திலும் இறகு களையும் பொருத்திய வாறு தனி நபர் ஒருவர் 38 கிலோ மீற்றர் தூரத்திற் குப் பறந்து சென்று சாதனை படைக்கவுள்ள செய்தி ஊடகங்களில் பெரிதும் பேசப்படு கின்றது.

பூமியிலிருந்து 2,000 மீற்றர் (6,500 அடி) உயரத்தில் இந்த பயணத்தை மேற்கொள்ளவுள்ள இவர் மணிக்கு 220 கி.மீற்றர் வேகத்தில் பயணிக்க வுள்ளார் என்று அவரது தொழில் நுட்பக் குழுவினர் தெரிவித்துள்ள னர். மொரோக்கோவிலிருந்து ஸ்பெய்ன் நாட்டை 13 நிமிடங் களில் சென்றடைவதே இவரது இலக்காகும். ஸ்பெயினை சென்ற டைந்தவுடன் பெரஷூட்டின் ஆதா ரத்துடன் தரையில் இறங்கவுள்ளார்.

இவர் பயன்படுத்தவுள்ள இறகுகள் காபன் ஃபைப்பர் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இவை இரண்டு மீற்றர் நீளத்தைக் கொண்டவை. பறப்பில் ஈடுபடுகையில் ரொஸியின் முதுகில் நான்கு என்ஜின்கள் பொருத்தப்பட்டிருப்பதுடன், அவரது உடல் அசைவின் மூலமே விமானத்தைக் கட்டுப்படுத்தல் மேற்கொள்ளப்படவுள்ளது.

எப்படியிருப்பினும் இவருக்குப் பாதுகாப்பாக இவரது பின்னால் ஹெலி கொப்டரொன்றும் பறந்து செல்லும். இவர் நிகழ்த்த எதிர்பார்த்துள்ள சாதனையை வீடியோவில் ஒளிப்பதிவு செய்வதற்கும் அனர்த்தம் ஏதும் நேர்ந்தால் அவருக்கு உதவி புரிவதற்காகவுமே இந்த ஹெலி கொப்டர் அவரைப் பின் தொடரவுள்ளது.



தப்பித்தவறி இடைநடுவில் விமான என்ஜின் இயங்காவிட் டால் உடனே பெரஷூட்டின் மூலம் கீழே குதித்து விடுவா ராம். அவ்வாறான அனர்த்தம் ஏதும் நடக்காத அளவில் இந்த சாதனையை நிகழ்த்திவிடமுடி யும் என்று ரொஸி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் ஆசிரியைக்கும் பெற்றோர்களுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

ගුරුතුමිය: ආ... ඔයාලා හැමෝම වෙලාවට ඇවිත්.
ஆ... ஒயாலா ஹெமோம வெலாவட எவித்.
ஆசிரியை: ஆ.... எல்லோரும் நேரத்திற்கு வந்திருக்கிறீர்கள்.

දෙමව්පියන්: අපේ ළමයින්ගේ වැඩනේ. අපි හරියට කරන්න ඕනේ.
அபே லமய்ன்கே வெடனே. அபி ஹரியட கறன்ன ஓணே.
பெற்றோர்: எங்கள் பிள்ளைகளுடைய வேலைதானே. நாம் அதனை நன்றாக செய்யவேண்டும்.

නිමල්: මම මේ මේස හා පුටු සෝදන්නම්.
மம மே மேச ஹா புடு சோதன்னம்.
நிமல்: நான் இந்த மேசைகளையும் கதிரைகளையும் கழுவுகிறேன்.

මාලා: මමත් ඔයාට උදව් කරන්නම්.
மமத் ஒயாட உதவ் கறன்னம்.
மாலா: நானும் உங்களுக்கு உதவுகிறேன்.

ගුරුතුමිය: හතරදෙනෙක් එකතුවුනාම බිත්ති හතරටම තීන්ත ගාලා ඉවර කරන්න හැකි.
ஹதறதெனெக் எகதுவுனாம பித்தி ஹதரடம தீன்த காலா இவற கரன்ன ஹெகி.
ஆசிரியை: நான்கு பேர் சேர்ந்தால் நான்கு சுவர்களுக்கும் சுவர்ப்பூச்சு பூசி முடிக்கலாம்.

ගුරුතුමිය: මේ සමහර අම්මලා තේ, බිස්කට් ගෙනත්. හැමෝම තේ බීලා ඉන්න.
மே சமஹற அம்மலா தே, பிஸ்கட் கெனத். ஹெமோம தே பீலா இன்ன.
ஆசிரியை: சில அம்மாமார் பிஸ்கட், தேநீர் கொண்டு வந்திருக்கிறார்கள். அனைவரும் தேநீர் அருந்துங்கள்.

සරත්: දැන් තීන්ත ගාලා ඉවරයි.
தென் தீன்த காலா இவறய்.
சரத்: இப்போது சுவர்ப்பூச்சு பூசி முடிந்துவிட்டது.

ප්‍රථමාධාර පෙට්ටිය මෙතැන සවි කරමු.
பிரதமாதார பெட்டிய மெதன சவி கறமு.
முதலுதவிப் பெட்டியை இங்கே பொருத்துவோம்.

දෙමව්පියන්: දැන් නම් පන්ති කාමරය ලස්සනයි.
தென் நம் பந்(த்)தி காமரய லஸ்ஸனய்.
பெற்றோர்: இப்போது வகுப்பறை அழகாக இருக்கிறது.

ගුරුතුමිය: මේ ඔක්කොම ඔයාලගේ එකමුතුකම නිසායි.
மே ஒக்கொம ஒயாலகே எகமுதுகம நிஸய்.
ஆசிரியை: இதெல்லாம் உங்களுடைய ஒற்றுமையின் பலன்தான்.

ඔයාලට බොහෝම ස්තුතියි.
ஒயாலட பொஹோம ஸ்தூதிய்.
உங்கள் எல்லோருக்கும் மிக்க நன்றி.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

உதா: நாம் நன்றாக செய்யவேண்டும்.
අපි හරියට කරන්න ඕනේ.

i. நான் உங்களுக்கு உதவி செய்கிறேன்.
..............................

ii. தேநீர் அருந்துங்கள்.
..............................

iii. வகுப்பறை அழகாக இருக்கிறது.
..............................






**He, She, It** முதலான பிரதிப் பெயர்ச்சொற்களை (**Pronouns**) எழுவாய்ப் பகுதியில் கையாண்டு அமைக்கப்பட்ட நிகழ்கால தனி வாக்கியங்களின் வினா நிலை வாக்கியங்கள், உடன்பாடு நிலை வாக்கியங்கள் மற்றும் எதிர்மறை நிலை வாக்கியங்கள் ஆகிய மூன்றையும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) Does he go to office daily? (Interrogative)
அவன் தினமும் அலுவலகத்துக்குப் போகின்றானா? (வினா)

(ஆ) Yes, he goes to office daily. (Affirmative)
ஆம், அவன் தினமும் அலுவலகத்துக்குப் போகின்றான். (உடன்பாடு)

(இ) No, he does not go to office daily. (Negative)
இல்லை, அவன் தினமும் அலுவலகத்துக்குப் போவதில்லை. (எதிர்மறை)

---

(அ) Does she come here on Sundays? (Interrogative)
அவள் ஞாயிற்றுக்கிழமைகளில் இங்கே வருவதுண்டா? (வினா)

(ஆ) Yes, she comes here on Sundays. (Affirmative)
ஆம், அவள் ஞாயிற்றுக்கிழமைகளில் இங்கே வருவதுண்டு. (உடன்பாடு)

(இ) No, she does not come here on Sundays. (Negative)
இல்லை, அவள் ஞாயிற்றுக்கிழமைகளில் இங்கே வருவதில்லை. (எதிர்மறை)

---

(அ) Does it drink milk at night? (Interrogative)
அது இரவில் பால் குடிப்பதுண்டா? (வினா)

(ஆ) Yes, it drinks milk at night. (Affirmative)
ஆம், அது இரவில் பால் குடிப்பதுண்டு. (உடன்பாடு)

(இ) No, it does not drink milk at night. (Negative)
இல்லை, அது இரவில் பால் குடிப்பதில்லை. (எதிர்மறை)

---

(அ) Does he stay here at night? (Interrogative)
அவன் இரவில் இங்கே தங்குவதுண்டா? (வினா)

(ஆ) Yes, he stays here at night. (Affirmative)
ஆம், அவன் இங்கே இரவில் தங்குவதுண்டு. (உடன்பாடு)

(இ) No, he does not stay here at night. (Negative)
இல்லை, அவன் இரவில் இங்கே தங்குவதில்லை. (எதிர்மறை)

---

(அ) Does she eat bread at night? (Interrogative)
அவள் இரவில் பாண் சாப்பிடுவதுண்டா? (வினா)

(ஆ) Yes, she eats bread at night. (Affirmative)
ஆம், அவள் இரவில் பாண் சாப்பிடுவதுண்டு. (உடன்பாடு)

(இ) No, she does not eat bread at night. (Negative)
இல்லை, அவள் இரவில் பாண் சாப்பிடுவதில்லை. (எதிர்மறை)

---

(அ) Does it bark at night? (Interrogative)
அது இரவில் குரைப்பதுண்டா? (வினா)

(ஆ) Yes, it barks at night. (Affirmative)
ஆம், அது இரவில் குரைப்பதுண்டு. (உடன்பாடு)

(இ) No, it does not bark at night.
இல்லை, அது இரவில் குரைப்பதில்லை. (எதிர்மறை)

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தவளைத் தோலை இவான் எரித்ததால்...!

விருந்து சிறப்பாக நடைபெற்றது. விருந்தினர்கள் மகிழ்வுடன் உண்டனர், பருகினர், மகிழ்ச்சி அங்கு பெருக்கெடுத்து ஓடியது. அறிவும் புத்திசாலித்தனம் மிக்க வசிலீசா பானத்தைப் பருகிவிட்டு அடியில் எஞ்சியதை தனது இடக்கைச் சட்டைக்குள் ஊற்றினாள். அன்னத்தின் இறைச்சியைக் கொஞ்சம் சாப்பிட்ட அவள் எலும்புகளை வலக்கைச் சட்டைக்குள்ளாக எறிந்தாள். வலக்கைச் சட்டையை அசைத்தாள். அதில் ஏரியில் வெள்ளை அன்னங்கள் தோன்றின. இதைக் கண்டு அரசரும் அவரது விருந்தினர்களும் பிரமித்துப் போயினர்.

பின்னர் மூத்த புதல்வர்களின் மனைவிகள் நடனமாடத் தொடங்கினர்.

**"இளவரசன் இவான், என்ன காரியம் செய்துவிட்டாய்! இன்னும் மூன்று நாட்களுக்கு நீ பொறுத்திருந்தால் நான் எப்போதும் உன்னுடையவளாக இருந்திருப்பேன். இப்போது நீ செய்த காரியத்தால்....?"**

அவள் செய்ததைப் பார்த்த மூத்த புதல்வர்களின் மனைவிகளும் அதுபோலவே செய்தார்கள்.

அவர்கள் உண்டு பருகிய பின்னர் நடனமாடும் நேரம் வந்தது. அறிவும் புத்திசாலித்தனமும் மிக்க வசிலீசா இளவரசன் இவானின் கையைப் பற்றி நடனமாடத் தொடங்கினாள். சுற்றிச் சுழன்று அவள் நடனமாடியதைக் கண்டு அனைவரும் அதிசயித்தனர். தனது இடக்கைச் சட்டையை அசைத்தாள். அதில் ஏரி ஒன்று தோன்றியது; அவர்களும் தங்களது இடக்கைச் சட்டைகளை அசைத்தனர். இதனால், முன்னர் அவர்கள் மறைத்து வைத்திருந்த பானங்கள் விருந்தினர்கள் மீது சிதறின. தங்களது வலக்கைச் சட்டைகளை அசைத்தனர். எல்லாப் பக்கங்களிலும் மறைத்து வைத்திருந்த எலும்புகள் பறந்தன, அவற்றில் ஒன்று அரசரின் கண்ணில் பலமாகத் தாக்கியது. மிகவும் கோபமுற்ற அரசர் அந்த இரு மருமகள்களையும் தன் கண்ணிற்படாமல் வெளியேறுமாறு கூறினார்.

இதற்கிடையே, அங்கிருந்து நழுவிச் சென்ற இளவரசன் இவான் வீட்டுக்கு ஓடிச்சென்று தவளைத் தோலைக் கண்டுபிடித்து, அதைச் சூட்டடுப்பில் வீசி எரித்தான்.

விருந்து முடிந்து வீடு திரும்பிய அறிவும் புத்திசாலித்தனமும் மிக்க வசிலீசா தனது தவளைத் தோல் காணாமல் போய்விட்டதை உடனே கண்டறிந்தாள். மிகுந்த கவலையுடனும் துயரத்துடனும் ஒரு பெஞ்சின் மீது அமர்ந்து இளவரசன் இவானிடம் கூறினாள்;

"ஐயோ, இளவரசன் இவான், என்ன காரியம் செய்துவிட்டாய்! இன்னும் மூன்று நாட்களுக்கு நீ பொறுத்திருந்தால் நான் எப்போதும் உன்னுடையவளாக இருந்திருப்பேன். இப்போது நீ செய்த காரியத்தால் நான் போய்வருகிறேன். ஏழு கடல்களும் ஏழு மலைகளும் தாண்டியுள்ள ஒரு நாட்டில் மரணமற்ற கஷேய் வசிக்கும் இடத்தில் என்னைத் தேடிப்பார்"

அறிவும் புத்திசாலித்தனமும் மிக்க வசிலீசா சாம்பல் நிறக் குயிலாக மாறி ஜன்னலுக்கு வெளியே பறந்து சென்றாள். இளவரசன் இவான் கதறினான். நீண்ட நேரம் அழுதான். பின்னர் நாற்புறமும் குனிந்து வணங்கி, அறிவும் புத்திசாலித்தனமும் மிக்க தன் மனைவி வசிலீசாவைத் தேடிக் கால்போனபோக்கில் புறப்பட்டுச் சென்றான். நீண்ட தூரம் நடந்ததால் அவனுடைய காலணிகள் தேய்ந்து போயின. நீண்ட மேல்சட்டை கிழிந்து போனது. குல்லாய் மழையால் உருக்குலைந்து போனது. அப்போது, மிகவும் வயதான முதியவர் ஒருவரைச் சந்தித்தான்.

"வணக்கம், இளைஞனே! என்ன தேடுகிறாய்? எங்கே போகிறாய்?



இவான் நடந்தவற்றை முதியவருக்குக் கூறினான். ஐயோ, இளவரசன் இவான், எதற்காகத் தவளைத்தோலை நீ எரித்தாய்? அணியவோ, தூக்கி எறியவோ அது உன்னுடையதன்று. அறிவும் புத்திசாலித்தனமும் மிக்க வசிலீசா தன் தந்தையைவிட அறிவும் புத்திசாலித்தனமும் மிக்கவளாகப் பிறந்துவிட்டாள். இது அவருக்கு மிகுந்த கோபத்தை உண்டாக்கிவிட, மூன்று ஆண்டுகளுக்கு அவளைத் தவளையாக மாற்றிவிட்டார். சரி, இப்போது ஒன்றும் செய்வதற்கில்லை. இதோ நூற்கண்டு; இது எங்கெல்லாம் உருண்டு போகிறதோ அங்கெல்லாம் அச்சமின்றி பின்தொடர்ந்து செல்" என்று கூறினார் முதியவர்.

இளவரசன் இவான் மிகவும் வயதான அந்த முதியவருக்கு நன்றி கூறிவிட்டு, நூற்கண்டு சென்ற இடங்களுக்கெல்லாம் பின்தொடர்ந்து சென்றான். திறந்தவெளி ஒன்றில் கரடியைச் சந்தித்தான். அதைக் கொல்லப் போனான். ஆனால், கரடியோ மனிதக் குரலில் பேசியது.

"என்னைக் கொல்லவேண்டாம். இளவரசன் இவான், என்றாவது என்னுடைய உதவி உனக்குத் தேவைப் படலாம்"

இளவரசன் இவான் கரடி மீது இரக்கம் கொண்டு அதைப் போக விட்டுவிட்டு மேலும் புறப்பட்டான். அப்போது காட்டு வாத்து ஒன்று அவனது தலைக்கு மேலாகப் பறந்து வருவதைக் கண்டு, அதற்கு அம்பால் குறி வைத்தான். ஆனால், காட்டு வாத்து மனிதக் குரலில் அவனிடம் பேசியது;

(தொடரும்....)

# சிறுவனின் சாதனை

பூபாலன், மதுபாலன் இருவரும் அருகில் உள்ள நகரப் பாடசாலையில் படிக்கிறார்கள். இருவரும் பெரிய ஏரிக்கரையின் வழியாக நடந்தே பாடசாலைக்குச் செல்வது வழக்கம். அன்று மழை பெய்து கொண்டு இருந்தது. பூபாலனுக்கு உடல்நிலை சரியில்லை. மதுபாலன் மட்டும் பாடசாலைக்குச் சென்றான். பகல் முழுவதும் கனமழை பெய்ததால் எங்கும் வெள்ளக்காடானது. மாலையில் பாடசாலையில் இருந்து அந்த ஏரிக்கரை வழியாக நடந்து வந்து கொண்டு இருந்தான் மதுபாலன். மழை இலேசாகப் பெய்து கொண்டே இருந்தது. ஏரி நிரம்பி கரையின் ஓரிடத்தில் தண்ணீர் கசிந்து சென்றது. அதை அப்படியே விட்டுவிட்டால் கரை உடைப்பெடுத்துவிடும். அதனால் பெரிய அபாயம் ஏற்படும் என்று அவனுக்குப் புரிந்தது.

உடனே அவன் புத்தகங்களை பையிலிருந்து எடுத்து ஓரிடத்தில் வைத்தான். பக்கத்தில் கிடந்த மணலை புத்தகப்பையில் அள்ளி



வந்து கரையில் கசிவு ஏற்பட்ட இடத்தில் கொட்டினான். ஆனாலும் கசிவு நிற்கவில்லை. புல் கோரைப்புல் போன்றவற்றைப் பிடுங்கி வந்து அடைத்துப்பார்த்தான். அப்போதும் நிற்கவில்லை. மேலும் மேலும் அதிகமாக நீர் கசிந்து கொண்டிருந்தது.

அவனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. அப்படியே விட்டால் ஊரே மூழ்கும் அபாயம். சத்தம்போட்டுக் கூப்பிடுவதற்கோ கண்ணுக்கு எட்டிய தூரம்வரை யாரும் தென்படவில்லை. இதை எப்படியும் தடுத்தே ஆகவேண்டும் என நினைத்து தண்ணீர் கசிந்து செல்லும் பாதையின் குறுக்கே படுத்துக்கொண்டான். அப்போது தண்ணீர் கசிவது நின்று விட்டது அப்படியே இரண்டு மணி நேரம் படுத்திருந்தான். மிகுந்த குளிரால் அவன் உடல் நடுங்கியது. ஆனால் எழுந்தால் கரை உடைந்துபோகும் ஆபத்து. இதேவேளை, பாடசாலைக்குச் சென்ற மகனைக் காணவில்லை என இரவு 7 மணிக்கு இரண்டு மூன்று ஆட்களை துணைக்கு அழைத்துக் கொண்டு ஏரிக்கரையின் வழியாகத் தேடிக்கொண்டு வந்தார் மதுபாலனின் தந்தை.

அங்கே ஓரிடத்தில் தன் மகன் கீழே கிடப்பதைக் கண்டார். அவனது உடல் குளிரில் விறைத்துப்போய் நடுங்கியது அவனை அப்படியே தூக்கினார். அப்போது அவருக்கு நடந்தது என்ன என்பது புரிந்தது.

உடனே அவர் ஓர் ஆளை ஊருக்கு அனுப்பி மணல் மூடைகளைக் கொண்டுவரச் செய்து உடைப்பை சரி செய்தார். மதுபாலனை உடனே ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு சேர்த்தார். கேள்விப்பட்டு அவன் நண்பர்களும் ஆஸ்பத்திரியில் போய் அவனைப் பார்த்தனர். மதுபாலன் மட்டும் இல்லை என்றால் ஏரியை ஒட்டிய ஐந்து ஊர்களும் இந்நேரம் வெள்ளத்தில் மூழ்கி இருக்கும். ஊர் மக்கள் அனைவரும் அவனது வீரச் செயலைப் பாராட்டி னார்கள். மறுநாள் பாடசாலை யில் தலைமை ஆசிரியரும், ஏனைய மாணவர்களும் மதுபாலனைப் பாராட்டினார்கள். வீரதீரச் செயல் புரிபவருக்கு வழங்கப்படும் விருது கிடைக்க சிபாரிசு செய்வதாக தலைமை ஆசிரியர் மகிழ்ந்து கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்விக்கு நடுவரின் தீர்ப்பே காரணமாம்!





இந்திய-இலங்கை அணிகளுக்கிடையே நடைபெற்ற டெஸ்ட் தொடரில் இந்திய அணி வெற்றியீட்டிய பின்னர் கருத்துத் தெரிவித்துள்ள இலங்கை அணியின் தலைவர் சங்கக்கார, நடுவர்கள் வழங்கிய சில மோசமான தீர்ப்புகளினாலேயே தமது அணி படுதோல்வி அடைய நேரிட்டதாக தெரிவித்துள்ளார்.

"இலங்கை அணி வீரர்கள் கடுமையாகப் போட்டியிட்ட போதிலும் நடுவரின் தவறான தீர்ப்பினால் ஏராளமான ஓட்டங்களை தமது அணி இழக்க வேண்டியேற்பட்டதாகவும் அவ்வாறே, கூடிய விக்கெட்களையும் இழக்க நேரிட்டதாகவும் குறிப்பிட்டுள்ள அவர், நடுவரின் தீர்ப்பை ஆட்சேபித்து மேன்முறையீடு செய்வதற்கான விதிமுறைகள் இருந்திருந்தால் எந்தளவிற்கு அது பயனுடையதாக இருந்திருக்கும் என்பதை தற்போது உணர்வதாகவும் அப்படியான ஒரு மாற்றுவழி இருந்திருந்தால் இந்தளவிற்கு மோசமான ஒரு தோல்வியை தவிர்த்திருக்கமுடியும்" என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறே, எண்பதுகளில் கபில்தேவ், கவஸ்கர் ஆகியோருடன் இலங்கை வந்திருந்த இந்திய அணிக்கு எதிராக இலங்கை நடுவர்கள் தவறான தீர்ப்புக்களை வழங்கியமையினால் இந்திய அணி அன்றைய போட்டிகளில் படுதோல்வி அடைய நேரிட்டதாக அந்நாட்களில் இந்தியத் தரப்பினர் குற்றஞ்சாட்டியிருந்தனர். தற்போது இத்தனை வருடங்களின் பின்னர், அதேபோன்றதோர் குற்றச்சாட்டை இலங்கைத் தரப்பும் முன்வைக்கும் அளவிற்கு நிலைமை அமைந்திருப்பது கவனிக்கத்தக்க விடயமாகும் என்று விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

# முதல் இடத்தை இந்தியா தக்கவைக்குமா?



சர்வதேச டெஸ்ட் தரப்படுத்தல் பட்டியலில் முதல் தடவையாக இந்திய அணி முதலாவது இடத்தை பெற்றுள்ளமைக்கு இந்திய அணியினருக்கு பெருமளவில் வாழ்த்துக்கள் குவிந்துகொண்டுள்ளன.

இலங்கையுடனான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் 2-0 என்ற கணக்கில் வெற்றியீட்டியதன்மூலம் இந்திய அணி இந்த நிலையை அடைந்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபையினால் 2001 ஆம் ஆண்டிலேயே முதல் தடவையாக மேற்படி தரப்படுத்தல் பட்டியல் அறிமுகம் செய்யப்பட்டது.

அன்று தொடக்கம் இரண்டு நாடுகள் மட்டுமே முதலாவது இடத்தை வகித்துள்ளன. அந்தவகையில், அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா ஆகிய இரண்டு அணிகளே இதுவரை டெஸ்ட் தரப்பட்டியலில் முதல் இடத்தைப் பெற்றிருந்த நாடுகளாகும். அதற்கு அடுத்தபடியாக தற்போது இந்தியா முதலிடத்தைப் பெற்றுள்ளது.

மேற்படி பட்டியலில் ஆரம்பத்தில் இரண்டாம் இடத்தில் இருந்த இலங்கை அணி நான்காம் இடத்திற்குப் பின் தள்ளப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா மே.இ.தீவுகள் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரில் 3-0 என்ற கணக்கில் ஆஸி வெற்றியீட்டினால் மீண்டும் முதலாம் இடத்தை ஆஸி பிடித்து விடமுடியும். அவ்வாறே அடுத்த மாதம் இங்கிலாந்திற்கு எதிரான டெஸ்ட் தொடரில் 2-0 என்ற கணிப்பில் தெ.ஆபிரிக்கா வெற்றியீட்டினால் தெ.ஆபிரிக்கா அணி மீண்டும் முதலிடத்தை வென்றுவிடலாம்.

டெஸ் தரப்பட்டியல் வருமாறு;

| இடம் | நாடு | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | இந்தியா | 124 |
| 02 | தெ.ஆபிரிக்கா | 122 |
| 03 | அவுஸ்திரேலியா | 116 |
| 04 | இலங்கை | 115 |
| 05 | இங்கிலாந்து | 105 |
| 06 | பாகிஸ்தான் | 84 |
| 07 | நியூஸிலாந்து | 80 |
| 08 | மே.இ.தீவுகள் | 76 |
| 09 | பங்களாதேஷ் | 13 |

# தோல்வியை தவிர்த்த ஆஸி அணி



அவுஸ்திரேலியா-மே.இ.தீவுகள் அணிகளுக்கிடையே நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளது. இப்போட்டியில் முதல் இன்னிங்ஸில் மே.இ.தீவுகள் அணி 451 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா அணி 438 ஓட்டங்களை எடுத்திருந்தது. மீண்டும் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மே.இ.தீவுகள் அணி 317 ஓட்டங்களை எடுத்தமையால் முதல் இன்னிங்ஸில் பெற்றிருந்த 13 மேலதிக ஓட்டங்களுடன் மொத்தமாக 330 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதற்கமைய வெற்றி இலக்கான 331 ஐ நோக்கி துடுப்பெடுத்தாடிய ஆஸி அணி 5 விக்கெட் இழப்பிற்கு 212 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. மூன்றாவது டெஸ்ட் போட்டி இன்று 16 ஆம் திகதி நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# றகர் போட்டியில் ஜப்பான் செம்பியன்





கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் மூன்று நாட்களாக நடைபெற்ற அணிக்கு ஏழு பேரைக் கொண்ட 'கால்டன்' ஆசிய கிண்ண றகர் போட்டியில் ஜப்பான் அணி செம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. இறுதிப்போட்டியில் ஜப்பான், மலேசியா அணிகள் மோதிக் கொண்டதில் 26-7 என்ற கணக்கில் ஜப்பான் அணி வெற்றி கொண்டது. இப்போட்டிகள் இலங்கையில் நடத்தப்பட்டபோதிலும் இலங்கை றகர் அணி போதியளவில் தமது திறமைகளை வெளிப்படுத்தவில்லை. இலங்கை-கஸகஸ்தான் அணிகளுக்கிடையே நடைபெற்ற காலிறுதிப் போட்டியின்போது 17-12 என்ற கணக்கில் கஸகஸ்தான் அணி வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலை மட்டப் போட்டிகளில் புனித பீட்டர்ஸ் கல்லூரியும் கொழும்பு றோயல் கல்லூரியும் மோதியதில் 38-12 என்ற கணக்கில் புனித பீட்டர்ஸ் கல்லூரி வெற்றியீட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# புதிய பயோடீசல் அறிமுகம்

டீசல், பெற்றோலுக்குப் பதிலாக பயன் படுத்தப்படும் மாற்று எரிபொருளாகவே பயோடீசல் இருக்கின்றது. தாவர-விலங்குகளின் கழிவுகள், காட்டா மணக்கு மற்றும் சோயா அவரை ஆகிய வற்றிலிருந்தே பயோடீசல் தயாரிக்கப் படுகின்றது. எனினும், தற்போது கறிக் கோழி, வாத்துகளின் இறகுகளிலிருந்தும் தரமான பயோடீசல் தயாரிக்கலாம் என அவர்கள் தெரிவிக்கின்றனர். அதிலும் ஆச்சரிய மான விடயம் என்னவெனில், ஒரு வாளி அளவு இறகுகளிலிருந்து ஒரு துளி அளவு பயோடீசல் தான் தயாரிக்கமுடியும் என்பதாகும்.

எவ்வாறாயினும், அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் எரிபொருளின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்ற




பயோடீசல் தயாரிக்கலாம் என்று கண்ட றியப்பட்டுள்ளது. அமெரிக்காவின் நெவாடா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ரசாயனம் மற்றும் உலோகவியல் பொறி யியல்துறை மாணவர்களே இந்தப் புதிய தயாரிப்பு முறையை அறிமுகப்படுத்தி யுள்ளனர்.

உணவுக்காக வாத்துகள் மற்றும் கோழிகள் வளர்க்கப்படுகின்றபோது அவற்றின் இறைச்சி தவிர்ந்த ஏனைய பாகங்கள் கழிவுகளாக அப்புறப்படுத்தப் படுகின்றன. இவ்வாறு அப்புறப்படுத்தப் படுகின்ற இறகுகளில் சுமார் 11 சதவீத அளவான கொழுப்பு இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இதனை நீருடன் சேர்த்துக் கொதிக்க வைப்பதனூடாக நிலையில், அதனை சமாளிப்பதற்காக மாற்று எரிபொருள் தயாரிப்புகளில் அந்நாடுகள் பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டு வருகின்றன. அந்தப் பட்டியலில் கறிக்கோழி, வாத்து என்பனவற்றின் இறகுகளிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற புதிய பயோடீசலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் ஏற்கனவே சோயா அவரை, காட்டாமணக்கு மற்றும் தாவர-விலங்குகளின் கழிவுகளிலிருந் தும் பயோடீசல் உற்பத்தி முறைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. இருந்தாலும் இவற்றில் இருந்து தயாரிக்கப்படும் பயோடீசலைவிட இறகுகளிலிருந்து தயாரிக்கப்படும் பயோடீசலா னது $40^{\circ}F$ வெப்பநிலையில் ஆவியாகக் கூடியது. எனவே, இது பெரும் வெற்றியாகும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# சுதந்திர கருத்துக்கள்



✸ மற்றவர்களுக்கு சுதந்திரம் வழங்க மறுக்கின்றவர் களுக்கு அந்தச் சுதந்திரத்தை அனுபவிக்கத் தகுதி இல்லை. -ஆபிரஹாம் லிங்கன்

✸ எந்த மனிதனும் எவ்வளவுதான் பெருமை உடை யவனாக இருந்தாலும் அல்லது சக்தி வாய்ந்தவனாக இருந்தாலும் ஒரு மீனைப்போல எப்பொழுதும் சுதந்திரமாக இருக்கமுடியாது. -ஜோன் ரஸ்கின்

✸ தனி மனிதனின் சுதந்திரம் இவ்வாறுதான் வரையறுக்கப்பட்டதாக இருக்கவேண்டும்; அவன் மற்றவர்களுக்கு ஒரு தொந்தரவாக இருக்கக்கூடாது. -ஜோன்ஸ் வேர்ட்மில்

✸ என்றென்றும் விழிப்புணர்வுடன் இருக்கவேண் டும் என்ற நிபந்தனையுடன்தான் கடவுள் மனிதனுக்கு சுதந்திரம் வழங்கி இருக்கிறான். -ஜோன் பில்பாட்கறன்

# 2009, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



பொலன்னறுவை முஸ்லிம் மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் எஸ்.சர்ஜானா, 146 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அப்துல் ஸலாம்-ஜென்னத் பீபி தம்பதியரின் புதல்வியாவார்.



வியாங்கல்லை முஸ்லிம் மஹா வித்தியாலய மாணவியான எஃப். நஸ்ஹறா, 141 புள்ளிகளைப் பெற் றுள்ளார். இவர், நிஸ்தார்-அமீஸா தம்பதியரின் புதல்வியாவார்.



யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் ஜெ.சாரங்கி, 159 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், கு.ஜெயகுமார்-ஜெ.நீலாம்பிகை தம்பதியரின் புதல்வியாவார்.



வாழைச்சேனை இந்து மத்திய கல்லூரி மாணவரான ந.விரோமிஜன், 145 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



வாழைச்சேனை இந்து மத்திய கல்லூரியில் கல்வி பயிலும் அ.அபிர்தன், 154 புள்ளிகளைப் பெற்றுள் ளார்.



அட்டுளுகம, அல்-கஸ்ஸாலி மத்திய கல்லூரி மாணவி யான சிம்லா ஹிஜாஸ், 156 புள்ளிகளைப் பெற்றுள் ளார்.



அட்டுளுகம, அல்-கஸ்ஸாலி மத்திய கல்லூரி மாணவரான இனாமுல் ஹஸன் நவாஸ், 153 புள்ளிகளைப் பெற்றுள் ளார்.



வாழைச்சேனை இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சு.அஸாந்தன், 147 புள்ளிகளைப் பெற்றுள் ளார்.



வாழைச்சேனை இந்துக் கல்லூரியைச் சேர்ந்த க.தனோஜ், 145 புள்ளிகளைப் பெற்றுள் ளார்.



அட்டுளுகம, அல்-கஸ்ஸாலி மத்திய கல்லூரி மாணவியான ஹஸீனா இர்பான், 149 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



கு/தெனு பாத்திமா முஸ்லிம் மகளிர் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் பாத்திமா ரஸீனா, 159 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.ரலூப்-எஃப்.ரிஸானா தம்பதியரின் புதல்வியாவார்.



யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்தின் மாணவியான இ.சாம்பவி, 154 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சி.இராஜகுலசிங்கம்-நிறைஞ்களா தம்பதியரின் புதல்வியாவார்.



பொலன்னறுவை முஸ்லிம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஃப்.ஜனா, 143 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.தௌபீக்-எஃப்.பாஸிலா தம்பதியரின் புதல்வியாவார்.



பொலன்னறுவை முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவரான ஏ.அஸ்பக், 143 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், கலீல் ரஹ்மான்-ஏ.ஜாயிஷா ஆகியோரின் புதல்வராவார்.



பண்ணவ மு.ம.ம. வித்தியாலய மாணவியான பாஸிலா பானு, 156 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



பண்ணவ மு.ம.ம. வித்தியாலயத்தில் கல்வி கற்கும் பாத்திமா ஹசனிய்யா, 155 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



அக்குறனை, அஸ்ஹர் மத்திய கல்லூரியிலிருந்து 19 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். அவர்கள் தங்கள் ஆசிரியர்களுடன் நிற்பதை படத்தில் காணலாம். சித்தியடைந்த மாணவர்களின் விபரங்கள் வருமாறு;


ஏ.ஆய்ஷா (176 புள்ளிகள்), அம்ரா லீனா (172 புள்ளிகள்), எம்.சாதிக் (166 புள்ளிகள்), எப்.அப்துல்லாஹ் (163 புள்ளிகள்), எஃப்.ராஷிதா (159 புள்ளிகள்), எம்.ஸகி (159 புள்ளிகள்), ஏ.ஹக் (158 புள்ளிகள்), எம்.சாபிர் (158 புள்ளிகள்), எஃப்.சகீகா (151 புள்ளிகள்), எம்.சஜ்ஜாட் (149 புள்ளிகள்), ரீமா ஹானி (147 புள்ளிகள்), ஏ.சாதிர் (147 புள்ளிகள்), ஏ.சாபித் (146 புள்ளிகள்), எம்.தஸ்னீம் (145 புள்ளிகள்), ஏ.அஹ்சன் (144 புள்ளிகள்), எம்.அஸாட் (142 புள்ளிகள்), எம்.அஷ்கர் (141 புள்ளிகள்), எம்.முஸ்னி (141 புள்ளிகள்), என்.எம்.மொஹமட் (141 புள்ளிகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 2 படங்கள் குறிக்கும் ஆங்கிலச் சொற்களுடன் இணைக்க




## 5 வட்டத்தினுள் இருக்கும் எழுத்துக்களைக்கொண்டு குறைந்தது 10 சொற்களையேனும் அமைக்க





## 4 இலக்கங்களை முறையே இணைத்து, அழகாக நிறம் தீட்டுங்கள்



## பொருத்தமான விடையில் கோடிடுக 1

1. நாற்படைகளில் ஒன்று (விசேட அதிரடிப் படை, விமானப் படை, குதிரைப் படை)
2. பனையின் இளங்காய் (குரும்பை, நுங்கு, வடு)
3. தபுதாரன் என்பதன் எதிர்ப்பாற் சொல் (விதவை, சீலி, மித்திரை)
4. தாமரை என்பதன் ஒத்த கருத்துச்சொல் (அம்புலி, அம்புஜம், அப்பு)
5. நெல்லின் உள்ளீடு (முத்து, பருப்பு, மணி)

## 3 ஒவ்வொரு கட்டத்திலும் வழங்கப்பட்டுள்ள தரவுக்கு ஏற்ப வட்டமிட்டு விடையளியுங்கள்




### அற்லஸ் அறிவுக்கு விருந்து 236 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
சி.திவ்யா,
தரம் - 6, இராமநாதன் இ.ம.கல்.,
கொழும்பு-02.

**போட்டி: 02**
ஹஸ்மத் ஸாய்மா, தரம் - 5A,
மே/அனு-அலிகார் ம.வித்.,
கள்-எலிய.

**போட்டி: 03**
ப.கோபிகா, தரம் - 9F,
வேம்படி பெ.உயர்தர பாட.,
யாழ்ப்பாணம்.

**போட்டி: 04**
ஐ.எம்.இஸ்தி ஷாம்,
தரம் - 4, மதீனா தே.பாட.,
மடவளை.

**போட்டி: 05**
ஜே.சாள்ஸ்,
தரம் - 3, நு/வ மகா ஊவா த.வித்.,
வலப்பனை.




அற்லஸ் அறிவுக்கு விருந்து 239
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

### பாராட்டுப் பெறுவோர்

- என்.எஃப்.சஹ்னா, தரம் - 5, அல்-அதான் ம.வித்., பதுளை.
- கோ.வினிதா, தரம் - 7, தெஹியோவிட த.ம.வித்., தெஹியோவிட.
- பா.மதுர்ஷனா, தரம் - 2B, நு/ மெராயா த.ம.வித்., லிந்துலை.
- எம்.எஃப்.ஆதிலா, தரம் - 2, அஸ்ஸம்ஸ் மு.வித்., நிவ்எல்பிட்டிய.
- யோ.சிவரஜினி, தரம் - 6, மட்டுவில் கமலாசினி க.ம.வித்., சாவகச்சேரி.
- டி.சரவணன், தரம் - 8, சென் அந்தனீஸ் கல்., நுவரெலியா.
- தா.பிரவீன், தரம் - 4, க/மில்லகந்த த.வித்., புளத்சிங்கள.
- எம்.ஸமீர், தரம் - 4, வத்தேகெதர ம.வித்., உடத்தலவின்ன.
- கு.துவிஷா, தரம் - 8B, சைவ மங்கையர் வித்., கொழும்பு-06.
- எம்.என்.நவீல், தரம் - 5, மாறை/அல்மினா ம.வித்., மீயல்லை, ஹக்மன.

### அறிவுக்கு விருந்து 236 விடைகள்


**போட்டி: 02**
1. காற்றாலை
2. நீர்ப்பாசனம்
3. தகராறு
4. பெருமளவு
5. சஞ்சாரம்
6. புதைகுழி

**போட்டி: 03**
12 மரங்கள்

**போட்டி: 04**

| | |
|---|---|
| 1) 7 | 2) 8 |
| 3) 6 | 4) 10 |
| 5) 7 | 6) 8 |

**போட்டி : 05**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய கால வழிபாட்டுத்தலம்



வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்து மனிதர்கள் கடவுளை வழிபட்டு வருகிறார்கள். அதற்கென கோவில்கள், மசூதிகள், தேவாலயங்களைக் கட்டினார்கள், திருவிழாக்களைக் கொண்டாடினார்கள். அந்த வகையில் பண்டைய மெசபத்தோமியாவில் (தற்போதைய ஈராக்) சுமேரியர்கள் 'ஜிகுரட்'களை கட்டினர். 'ஜிகுரட்' என்பது செங்கற்களைக் கொண்டு கட்டப்பட்ட கோவில் வளாகமாகும். இதன் அடித்தளப் பகுதியிலிருந்து பல படிக்கட்டுகள் அமைக்கப்பட்டிருக்கும். இதன் உச்சியில் கோவில் அமைந்திருக்கும்.

பாக்தாத் நகரத்திற்குத் தெற்கே 1920 ஆம் ஆண்டில் 'உர்' என்ற பண்டைய சுமேரிய நகரம் ஆய்வுகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. இங்குள்ள ஜிகுரட், நிலவுக் கடவுள் 'நான்னா'வுக்காக அமைக்கப்பட்டதாகும். இது உர் நகர ஆட்சியாளர்களான அரசர் 'நம்மு' மற்றும் அவரது மகன் சுல்கியால் கி.மு 2100 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அண்டை நகரங்களின் மீது உர் நகரின் அதிகாரத்தைக் காட்டும் விதமாகவும் இந்த ஜிகுரட் எழுப்பப்பட்டது.



உர் நகரத்தின் பழம்பெருமையைக் காட்டும் விதத்தில் இன்றும் சிறப்பாகப் பராமரிக்கப்படும் நினைவுச் சின்னமாக 'ஜிகுரட்' உள்ளது. இது மூன்று நிலைகளைக் கொண்டது. முதல் நிலையானது நான்கு பக்கங்கள் கொண்ட உயரமான அமைப்பாக அமைந்திருக்கின்றது. அது 60 மீற்றர் நீளமும் 45 மீற்றர் அகலமும் 15 மீற்றர் உயரமும் கொண்டதாக உள்ளது. 2,3 ஆவது நிலைகள் இடிந்த நிலையில் காணப்படுகின்றன. மூன்று நெருக்கமான படிக்கட்டு வழிகள் அமைந்துள்ளன. அவற்றின் நூறு செங்கல் படிக்கட்டுகள் உச்சிக்குச் செல்கின்றன.

பூமியையும் சொர்க்கத்தையும் இணைக்கும் பாலம் போன்ற அடையாளமாக, நிலவுக் கடவுளுக்கு ஒரு புவி இல்லமாக 'ஜிகுரட்' வடிவமைக்கப்பட்டது. அதனால், இதில் படுக்கையறை, சமையல்கூடம் போன்றவையும் அமைந்துள்ளன. ஜிகுரட்டின் சுவரில் காணப்படும் ஆப்பு வடிவிலான எழுத்துக்கள் மூலம், இது உர் நகரத்தின் நிர்வாக மையமாகச் செயல்பட்டதையும் அறியமுடிகிறது.

ஜிகுரட்டின் அருகில் அரசர்களின் கல்லறைகளை தொல்லியல் நிபுணர்கள் அகழ்வுகளின் மூலம் கண்டுபிடித்துள்ளனர். அங்கு பழைமையான பல பொக்கிஷங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை தற்போது பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

# இயங்கும் பழைமை மிகு திரையரங்கு




உலகின் மிகப்பழைமை மிக்க இயங்கும் திரையரங்கு சீனாவில் உள்ளது. டகுவான்லு சினிமா (Daguanlou Cinema) என்னும் இந்தத் திரையரங்கு பல மாதகால புனரமைப்பு வேலைகளுக்குப் பின் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

1903 ஆம் ஆண்டு திறக்கப்பட்டதிலிருந்து இந்தத் திரையரங்கு தொடர்ச்சியாக 102 வருடங்கள் இயங்கியுள்ளது. பழைமைமிக்க இயங்கும் திரையரங்கு என்று இது உலக சாதனைப் புத்தகமான கின்னஸிலும் இடம்பிடித்துள்ளது. அரசினதும் மற்றும் சீன புராதன கட்டடக்கலை ஆராய்ச்சி நிலையத்தினதும் ஐந்து மில்லியன் யுவான் நிதியில் இத்திரையரங்கு புதுப்பிக்கப்பட்டுள்ளது.

நூற்றாண்டு பழைமைமிக்க இந்தத் திரையரங்குக்குள் நுழையும்போது கடந்த காலத்துக்கும் நிகழ்காலத்துக்கும் இடையில் பயணிப்பது போன்ற ஓர் உணர்வு ஏற்படுவதாக இங்கு செல்பவர்கள் கூறுகின்றனர். புதுப்பிக்கப்பட்ட இத்திரையரங்குக்குள் புதிய வாசனை தென்பட்டாலும் பழைமையையும் பார்த்து ரசிக்கக் கூடியதாக இருக்கிறதாம். பழைய கறுப்பு வெள்ளை சுவரொட்டிகள், அலங்கரிக்கப்பட்ட பழைய நடைபாதை மற்றும் பழைமை மிக்க பொருட்கள் என்பன ஒரு நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்துக்கு அழைத்துச் செல்வதுபோல் இருக்கின்றதாம். இந்தப் பழைய திரையரங்கில் மக்களின் பழைமை உணர்வை தூண்டிவிட நாங்கள் விரும்புகிறோம் என்று திரையரங்கின் முகாமையாளர் வாங் சான் யூ கூறினார். இவர் இத்திரையரங்கின் பன்னிரெண்டாவது முகாமையாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இத்திரையரங்கின் புனரமைப்பானது இதற்கு மீண்டும் பழைய நல்ல காலத்தைக் கொண்டு வரும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

# நத்தார் சந்தை



நத்தார் பண்டிகைக் காலத்தில் நத்தார் கொண்டாட்டங்களுடன் தொடர்புபட்டதே நத்தார் சந்தை. இதற்கு கிறிஸ்மஸ் மார்க்கட், கிறிஸ்கின்ட்ல் மார்க்ட் (Christ Kindlmarkt) என்று பல பெயர்கள் உள்ளன. நத்தார் பண்டிகை தினத்துக்கு சுமார் நான்கு வாரங்களுக்கு முன்பிருந்தே இந்த நத்தார் சந்தைகள் இயங்கத் தொடங்குகின்றன. ஆரம்பத்தில் இந்த சந்தைகள் ஜேர்மனியிலும் ஆஸ்திரியாவிலுமே இயங்க ஆரம்பித்தன. எனினும், தற்போது பல்வேறு நாடுகளிலும் இந்த சந்தைகள் இயங்குகின்றன.

நத்தார் சந்தைகளின் ஆரம்ப காலத்தை நோக்குவோமானால் அது நீண்டகாலம் பின்னோக்கிச் செல்கிறது. 1434 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ட்ரெஸ்டன் நத்தார் சந்தை (Dresden Christmas Market) மிகப்பழைய சந்தைகளில் ஒன்றாகும்.



இங்கு வருடாந்தம் 15 லட்சம் முதல் 20 லட்சம் வரையிலான மக்கள் வருகை தருகின்றனர். பவுட்சென் நத்தார் சந்தை (Bautzen Christmas Market) இதனை விடவும் பழைமையானது. இது 1384 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

ஜேர்மனியிலும் ஆஸ்திரியாவிலும் உள்ள பல நகரங்கள் நத்தார் சந்தையை ஆரம்பிப்பதன் மூலம் குழந்தை யேசுவின் வருகையை தெரிவிக்கின்றன. இவற்றை 'குழந்தை இயேசு' சந்தை என்றும் கூறுகின்றனர். இந்த சந்தைக்கடைகளில் உணவு வகைகள், பானங்கள் மற்றும் பண்டிகைக் காலத்துக்குரிய பொருட்கள் மற்றும் பாரம்பரிய ரீதியிலான பொருட்களை வாங்கலாம். நத்தார் சந்தையின் ஆரம்ப இரவுகளில் குழந்தை இயேசு வேடம் தாங்கி வரும் பிள்ளைகள் இங்கு வரவேற்கப்படுகின்றமையும் முக்கிய நிகழ்வாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி மென்பொருட்களை பாவிப்போரில் அநேகர் இளம் பராயத்தினராம்



உலகளாவிய ரீதியில் இளம்பராயத்தினரே சட்டவிரோதமான கணினி மென்பொருட்களை பயன்படுத்துகின்றனர் என்ற அதிர்ச்சி தரும் தகவலை 'மைக்ரோசொஃப்ட்' நிறுவனம் வெளியிட்டுள்ளது.

அதாவது, 'டூப்ளிகேட்' என்று கூறுகின்ற இத்தகைய மென்பொருட்களைப் பாவிப்பதானது, அவற்றின் ஒரிஜினலை (அசலை) தயாரிக்கின்ற நிறுவனங்களுக்கு பாதிப்பைத் தருகின்றது. இதன் காரணமாகவே இது தொடர்பாக மேற்படி நிறுவனம் ஆய்வொன்றை மேற்கொண்டிருந்தது.






அதற்கமையவே இவ்வாறு 'போலி' மென்பொருட்களை அதிகமாகப் பாவிப்போரில் 60 வீதமானோர் இளம் பராயத்தினரே என்ற உண்மை தெரியவந்துள்ளது.

11 தொடக்கம் 16 வயதிற்கும் இடைப்பட்டவர்களே இவ்வாறு தடைசெய்யப்பட்ட 'போலி' மென்பொருட்களைப் பயன்படுத்தி வருகின்றனர். அதிலும் தாம் பயன்படுத்துவது போலியானவை என்று நன்றாகத் தெரிந்துகொண்டுதான் இவர்கள் இந்தக் காரியத்தை செய்கின்றனராம். இணையத்தின் வழியே பல்வேறு வகையிலான போலி மென்பொருட்களை டவுன்லோட் செய்தோ அல்லது சந்தையில் திருட்டு சீ.டி.க்களின் மூலமோ இவர்கள் இந்த 'போலி' மென்பொருட்களை பெற்றுக்கொள்கின்றனர்.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள இளம்பராயத்தினர், இவ்வாறு போலி மென்பொருட்களை வாங்குவது தமக்கு செலவை குறைப்பதாகவும் மாறாக இவற்றின்'ஒரிஜினலை'வாங்கப்போனால் அதிகமான பணத்தை செலவிட வேண்டிய நிலை இருப்பதனாலேயே 'போலி'யை தாம் வாங்குவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

மேலும் 'போலி' மென்பொருட்களை எந்த நேரத்திலும் வேண்டிய எந்தவொரு இடத்திலும் வாங்கக்கூடியதாக இருப்பதும் தமக்கு வசதியாக இருப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர். 'போலி' மென்பொருட்களை தடுப்பதற்கான மைக்ரோசொஃப்ட் நிறுவனத்தின் பொறுப்பு வாய்ந்த அதிகாரியாக உள்ள விச்செலா வோடெல் இதுபற்றி கருத்துத் தெரிவிக்கையில், "சட்டவிரோதமான இத்தகைய மென்பொருட்களை பயன்படுத்துவதனால் வைரஸ் தாக்கம் ஏற்பட்டு கணினிகள் செயலிழந்து போகக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகளால் எதிர்கால தலைமுறை சட்டவிரோதமான விடயங்களில் ஈடுபாட்டைக் காட்டுவதற்கான ஆபத்துக்கள் இருப்பதாகவும் இது வர்த்தக சந்தையிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. நவீன உலகை நோக்கிச் செல்லும் இளம் பராயத்தினர் அவற்றினூடே குறுக்கு வழிகளில் செல்வதை தவிர்ப்பதே நல்லதாகும்.






இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2009, டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday December 16, 2009.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org